



# திருக்கோயில்


நவம்பர் 90, விலை ரூ.3.

















சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி ஆலயத்திற்கு இந்தியன் ஒவர்சீஸ் வங்கியினர் ஜெனரேட்டர் வழங்கினார்கள். அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்., அவர்களிடம் வங்கியின் செயல் இயக்குநர் திரு. ஏ.நமசிவாயம் அவர்கள் ஆவணங்களை ஒப்படைக்கிறார். துணை ஆணையாளர் திரு கு.சிதம்பரம் பி.ஏ., ஆலய நிர்வாக அதிகாரியும் உதவி ஆணையாளருமான திரு ஜி.இராஜநாயகம் பி.ஏ. பி.எல் ஆகியோர் உடன் உள்ளனர்.





முகப்பு:

திருக்கழுக்குன்றம்
அருள்மிகு வேதகிரீஸ்வரர் ஆலயம்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை : 32 | திருவள்ளுவர் ஆண்டு 2021 பிரமோதூத ஆண்டு கார்த்திகை நவம்பர் 1990 விலை ரூ. 3-00 | மணி : 11

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

இறைவன் எங்கும் இருக்கின்றான்
—மாண்புமிகு முதல்வர் முத்தமிழ்அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்

முழுமூச்சுடன் செயல்பட்டு வருகிறோம்
—மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ.

அரன் அங்கி தன்னில் சங்காரம்
—திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

திருக்குடநீராட்டு விழா காண இருக்கும் திருக்கழுக்குன்றம்
—புலவர் வேதாசலம்

கந்தவேள் கருணை
டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

திருநாவுக்கரசர்
—மு. கிருட்டிணன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு)

விருத்தாசலம் ஸ்ரீகுமாரதேவரின் தெய்வீக நிகழ்ச்சிகள்
—தே.ஆ. ஸ்ரீநிவாசன்

குருவிடம் நம்பிக்கை வேண்டும்
—இராமகிருஷ்ண பரமஅம்சர்

ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

கோவூர் திருமேனீச்சரம்
—வித்துவான் மு. புண்ணியகோடி

கூத்தனூர் சரஸ்வதி ஆலயம்
—தி. இராசமாணிக்கம்


சித்திரபாரதம்
—செவ்வேள்

தனித்தனி முக்கனி பிழிந்து
—அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்.

# இறைவன் எங்கும் இருக்கின்றான்

மாண்புமிகு தமிழக முதல்வர்

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்



ஒரு பக்தன் ஆலயமொன்றில் ஆண்டவனின் சிலையை நோக்கிக் கால் நீட்டிப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தானாம்!

கோயில் பூசாரியார் அதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து அவனை எழுப்பி ''வேறு பக்கம் கால் நீட்டிப் படுத்துக் கொள்ளடா பரம பாதகா!'' என்று வசை பொழிந்தாராம்.

பூசாரியார் ஆணைக்குக் கட்டுப்பட்டு அந்தப் பக்தன், கால்களை வேறு பக்கம் நீட்டிப் படுத்துக் கொண்டானாம்.

என்ன ஆச்சரியம்! அவன் கால் நீட்டிய திசையில் ஆண்டவன் சிலை வந்து அமர்ந்து விட்டதாம்!


பூசாரியாருக்கு ஒன்றுமே புரியவில்லையாம். வில்லும் அம்பும் ஏந்திய அந்த ராமபிரானின் விக்கிரகத்தைப் பார்த்து ''ஹே ராமா! என்ன இது, என்ன லீலா வினோதம்?'' என்று துடித்துப் பதைத்துக் கேட்டாராம்.

உடன் விக்கிரகத்திலிருந்து வெளிப்பட்ட ராமபிரான், அந்தப் பூசாரியை நோக்கி ஒரு புன்னகையை நெளியவிட்டு திருவாய் திறந்தாராம்!

''அப்பனே பூசாரியாரே! அந்தப் பக்தன் என் விக்ரகத்தை நோக்கிக் கால் நீட்டக்கூடாது என்றீரே; நான் உம்மைக் கேட்கிறேன்; பதில் சொல்லும்! ஆண்டவனாகிய நான் இல்லாத இடம் எது? எந்தப் பக்கம் கால் நீட்டினாலும் நான் அந்தப் பக்கத்தில் மட்டுமல்ல; எல்லாப் பக்கத்திலும் இருக்கிறேன் என்ற உண்மையை அறியாத உமக்கு எம்மை பூஜை செய்ய அருகதையும் உண்டோ?''

ராமபிரானாம் அந்த ஆண்டவனின் கேள்விக்கு விடை அளிக்க முடியாமல்பூசாரியார் தலை குனிந்து வெட்கிப் போய் வியர்வை கொட்டிட விழுந்தாராம் ஆண்டவனின் பாதார விந்தங்களில்.

''ராமா! நீ எங்கும் இருப்பாய்! எல்லா இடங்களிலும் இருப்பாய். இந்த இடத்தில் மட்டுமே இருப்பாய் என்றெல்லாம் சொல்வது





தெளிவில்லாத பேச்சு. இப்போது என்னைத் தெளிய வைத்து விட்டாய்! அங்கு இங்கு எனாதபடி எங்கும் இருப்பவனே! என்னை மன்னித்துவிடு; உன் மகாத்மியம் அறியாத தற்காக இந்த ஜீவனை மன்னித்து விடு''.

பூசாரியார் புலம்பினார்! ஆண்டவன் மறைந்து விட்டார்; மன்னித்தேன் என்று அருள்பாலித்தபடியே!

## முழுமுச்சுடன் செயல்பட்டு வருகிறோம்!

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களின் சொத்துக்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலும், அதன் மூலம் பக்தர்கள் பொது மக்கள் பயன் அடைய வேண்டும் என்பதிலும் தமிழக அரசு கண்ணாக இருந்து வருகிறது. கோயில் சொத்துக்கள் கிராமங்களில் இருந்தாலும், நகர்ப்புறங்களில் இருந்தாலும் முறையாகப் பராமரிக்கப்பட்டு அதன் மூலம் கோயில் வருமானத்தைப் பெருக்குவதுடன், பக்தர்களும் பயன்பெறச் செய்ய வேண்டும் என்பதில் இந்த அரசு முழுமூச்சோடு செயல்பட்டு வருகிறது.

—மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்
திருமிகு **கே. பி. கந்தசாமி**, எம்.ஏ.,



# அரன் அங்கி தன்னில் சங்காரம்

திருமந்திரச் செம்மல்
டி.வி.வெங்கட்ராமன்
ஐ.ஏ.எஸ்

எண்ணற்ற சீவராசிகள் பிறந்து, வாழ்ந்து, இறப்பதை நாம் காண்கின்றோம். இது நமக்கு இயற்கையாகவே தோன்றுகின்றது. அதே போல இந்தப் பிரபஞ்சத்தில் எண்ணற்ற கோளங்களும் அண்டங்களும் மூலப்பொருள்களிலிருந்து உருவாகிப் பல லட்சக்கணக்கான ஆண்டுகள் தத்தம் நிலையில் தங்கி, பின்னர் உருமாறி அழிகின்றன. கடந்த நூற்றாண்டில் விஞ்ஞானம் அண்டம், பிண்டம் ஆகியவற்றின் தோற்றம், மறைவு போன்றவற்றை தீவிரமாக ஆராய்ச்சி செய்து நம்மை வியப்படையச் செய்யும் வகையில் பல முடிவுகளை நமக்கு வெளியிட்டுள்ளன. அண்டமாயினும் சரி, பிண்டமாயினும் சரி, இரசாயன, பௌதிக அடிப்படையில் தோற்றம் என்பது பல அணுக்களின் சேர்க்கை என்கிற ஒரு முடிவு விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவாக நமக்குக் கிடைத்த முக்கியமான ஒன்றாகும். அதேபோல், மறைவு என்பதும் அந்த அணுக்கள் இயற்கையின் நியதிகளுக்கு ஏற்ப கால கட்டத்தில் ஒன்று சேர்ந்து இருந்த நிலையிலிருந்து பிரிந்து இயங்குவதே யாகும் என்பதும் விஞ்ஞானத்தின் முடிவு. அந்த அணுக்களும் எவ்வாறுஉருப்பெறுகின்றன உருமாறுகின்றன, அவற்றின் மூலப்பொருள்கள் எவை, அவை எங்கிருந்து, எப்பொழுது தோன்றின போன்றவை பற்றி விஞ்ஞானிகள் உலகெங்கிலும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். இரண்டாவதாக அணுக்களில் அளவிலா ஆற்றல் அடங்கிக் கிடக்கின்றது என்றும் அந்த ஆற்றலின் தன்மையே அணுக்களின் தன்மையைக் குறிக்கின்றது என்றும், புகழ்பெற்ற ஐன்ஸ்ட்டீன் முதற்கொண்டு பல விஞ்ஞானிகள் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள். ஒரு பொருள் மறையும்பொழுது அதனுட் கிடக்கும் அணுக்களின் சேர்க்கையின் தன்மை மாறுகிறதே தவிர அணுக்களே அழியவில்லை என்பதும் இன்றைய விஞ்ஞானம் கண்ட ஒரு முடிவாகும். சுருங்கக்கூறின், தோற்றமும் மறைவும் பொருள்களின் தூல, சூக்கும நிலைகளில் ஏற்படும் மாறுதல்கள் என்கிற அளவுக்கு விஞ்ஞான ஆராய்ச்சியிலிருந்து நாம் தெரிந்து கொள்கின்றோம். இந்த முடிவுகளை நமக்கு அளித்த விஞ்ஞானிகளுக்கு நாம் நன்றி கூற வேண்டும்.

ஏன் என்றும், இதற்கும் மெய்ஞ்ஞான அறிவுக்கும் என்ன தொடர்பு என்றும் நீங்கள் கேட்கலாம். தொடர்பு உண்டு என்பதை பல ஆயிரம் ஆண்டுகளாக நம்முடைய மெய்யுணர்வாளர்கள் தங்களுடைய உள்ளறிவாக உணர்ந்துநமக்குதெரிவித்து வருகிறார்கள். விஞ்ஞானிகள் அணுக்களின் இயக்கம் இயற்கையின் நியதியைக் கடைப்பிடிக்கின்றன என்கிறார்கள். மெய்யுணர்வாளர்கள் அந்த நியதிகளுக்கு ஒரு தலைவன் உண்டு என்று நமக்கு அனுபவ ரீதியாக விளக்குகின்றார்கள். அணுக்கள் சடப்பொருள்களே. அவற்றின் சேர்க்கை நிலமாகவும், நீராகவும், தீயாகவும், காற்றாகவும், ஆகாயமாகவும் நமக்குத் தோன்றலாம். அவற்றின் சேர்க்கையே உலகமாகவும், உடலாகவும் மற்றும் பல்வேறு பொருள்களாகவும் நம்முன் தோன்றி, நிலைபெற்று ஒடுங்கும் தன்மையை பெறுகின்றன. அவற்றை இந்த இயக்கத்தில் ஈடுபடுத்த ஓர் முதல்வன் வேண்டும். 'தருபவன் ஒருவன் வேண்டும்' 'செயல்செய்வான் ஒருவன் வேண்டும்', 'எல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்' என்பது சிவஞானசித்தியார்.

இப்படியாக பல பொருள்கள் இந்தப் பிரபஞ்சத்தில் தோன்றுகின்றன. நிலைத்து நிற்கின்றன. தன்மை மாறுகின்றன. காணப்படும் பொருள்கள் நாம் காண இயலாதவாறு மறைகின்றன. இவை சடப்பொருள்களே ஆயினும் இறைவன் நீக்கமற நிறைந்த நிலையில் இவற்றுள்ளும் இறைவனுடைய அறிவும், ஆற்றலும் கலந்தே உள்ளன என்பதையும் உணரலாம்.

உயிர்கள் அநாதியானவை. இறைவனுடைய பேரருளால் சிறிது ஆற்றலும், தான் சார்ந்ததை அறிந்து கொள்ளக் கூடிய அறிவும் பெற்றவை. இறைவன் உயிர்களை இயக்க, உயிர்களும் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் இயங்கத் தொடங்குகின்றன. அநாதியே உயிருடன் சம்பந்தப்பட்டு இருப்பது ஆணவ மலமாகும். இதுவே முதற்குற்றமாகும். இந்தக் குற்றம் அகலும்பொருட்டு இறைவன் உயிர்களுக்கு அனுபவத்தைத் தருகின்றான். அந்த அனுபவத்திற்காக பொருள்களும் பொருள்களின் சேர்க்கையும் ஏற்படுகின்றன. ஆணவ மலத்தின் நீக்கத்திற்கு உடலும், பொருள்களும் பயன்படுவது போலவே மாயையும் கன்மமும் பயன்படுகின்றன. இறைவன் இவற்றை உயிருடன் கூட்டுவித்து உயிர்களின் அறியாமையாகிய நிலைமை மாற இயக்கம் நடைபெற காரணமாகின்றான். ஆகவே படைப்புத் தொழிலுக்கு ஒரு நோக்கம் இருக்கின்றது.

''உயிர்க்கு மன்னிய புத்தி முத்தி வழங்கவும்
அருளான் முன்னே துன்னிய மலங்கள் எல்லாம்
துடைப்பதும் சொல்லலாமே''

என்பது சிவஞானசித்தியார்.

ஆகவே, தனு, கரண, புவன போகங்களை இறைவன் தந்தருளி, உயிர்களுடன் அவற்றைச் சேர்த்து உயிர்கள் தாங்கள் செய்யும் வினைகளுக்கு ஏற்ப, மலங்களை நீக்கிக்கொள்வதற்கான பாதைகளில் உயிர்களைச் செலுத்தி அவற்றை உய்விக்கின்றான். ஆணவமாகிய மலம் நீக்கும்பொருட்டு, மாயையும் கன்மமும் உயிரை வந்தடைகின்றன. ஆணவ அழுக்கை நீக்குவதற்கு மாயையும் கன்மமும் பயன்படுகின்றன. உண்மையில் இந்த மலங்கள் சடமானவையே. இவற்றின் மூலம் உயிருக்கு அனுபவங்கள் ஏற்பட இறைவனே உதவி செய்கின்றான். இந்த இயக்கமே படைப்பு என்று கூறப்படுகின்றது. படைப்பின் மறு பெயர் தத்துவங்களின் சேர்க்கையாகும். ஐந்து பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள், கன்ம, ஞான இந்திரியங்கள், நான்கு உட்கரணங்கள் போன்றவற்றின் சேர்க்கையால் உயிருக்கு தகுந்த அனுபவம் பெற இடம் கிடைக்கின்றது, இறைவன் தனது சக்தியை இதற்காகப் பயன்படுத்திப்பல தொழில்களுக்கு அதிகாரிகளை நிர்ணயித்து, அவர்களின் மூலமாக இந்த இயக்கத்தை நடத்தினாலும், எங்கும், எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்துள்ளான். இதையே மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில்

''பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய்போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய்
போற்றி''

எனக் கூறியுள்ளார்.

இந்த உலகில் நாம் பருப்பொருட்களைப் பார்க்கிறோம், அனுபவிக்கின்றோம். விஞ்ஞானம் பருப்பொருட்களை அணுக்களின் சேர்க்கை என்று கூறுகிறது. மெய்யுணர்வாளர்கள் பிரபஞ்சம் அத்தனையும் தத்துவ வடிவே என்பார்கள். இறைவனுடைய சக்தியாகிய மாயை முதல் நாம் அனுபவிப்பவை எல்லாம் இந்த தத்துவக் கூட்டங்களே என்பது மெய்ஞ்ஞானிகளின் அனுபவபூர்வமான கண்டுபிடிப்பு, இதை சிவஞானசித்தியார் மிகத் தெளிவாக

''தத்துவம் ரூப மாகும், தரும்அருஉருவம்
எல்லாம்;
தத்துவம் தூல, சூக்க, பரங்களும், ஆகி
நிற்கும்;
தத்துவம் தன்னில் சாரும் அணுக்கள்,
சாதாக்கியத்தில்
தத்துவம் சத்தம் சாரும்; சகலமும்
தத்துவம் காண்''.

என்று உரைக்கின்றது.

உலகத்திலே விளங்கித் தோன்றும் பொருட்கள் நாளடைவிலே மறைவதைப் பார்க்கின்றோம், அவை அழிந்தன என்று சொல்லக் கூடாது; அழிந்தது என்றால் அவை இல்லாமல் போய்விட்டது என்கிற பொருள் வரும். ஆனால், உண்மையில் உலகத்தில் தோன்றிய பொருட்கள் அழிவதுபோல் காணப்பட்டாலும் அவை தன்மை மாறுகின்றன என்று கூறுவதே பொருத்தமாகும், பருப்பொருட்கள் தங்களுடையகாரணமான நுட்பப் பொருள்களையும், நுட்பப் பொருள்கள் தங்களுக்குக் காரணமான தத்துவங்களிலும், தத்துவங்கள் இறைவனின் தோற்றமான சக்தியிலும் ஒடுங்கிக் கொள்கின்றன, இந்த ஒடுக்கத்தையே நாம் அழிதல் என்று சொல்கிறோம். இதுவே சங்காரம் எனப்படும், சங்காரத்தைப் பொருத்தவரை விஞ்ஞானம் அதிக தூரம் செல்லவில்லை. இந்தப் பிரபஞ்சம் எவ்வாறு முடிவுறும் என்பது பற்றி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஒப்பற்ற விஞ்ஞானிகள் ஒரு கட்டத்திற்குப் பிறகு மேற்கொண்டு செல்லத் தயங்குகின்றார்கள், அதற்குக் காரணம் இயற்கையின் நியதிகள் நமது அறிவுக்கு எட்டாத நிலையில் இப்போது இயங்குவது போலவே தொடர்ந்து இயங்குமா என்கின்ற பலத்த சந்தேகம் எழுகின்றது. இந்தச் சந்தேகத்தை நீக்க விஞ்ஞானிகள் வரப்போகும் நிலைகளைப் பற்றி ஓரளவு யூகித்துத்தான் பதில் சொல்ல வேண்டியுள்ளது. மேலும், சங்காரத்திற்கென ஒரு நோக்கம் இருக்கின்றது என்பதையும் விஞ்ஞானிகள் இது வரை ஒத்துக் கொள்ளாத காரணத்தினால் பௌதிக இரசாயன அளவுகளால் மட்டும் அவர்களால் ஒரு முடிவான முடிவை அடைய இயலவில்லை,

ஆழ்ந்த இறை அனுபவம் பெற்ற மெய்யுணர்வாளர்களின் கண்ணோக்கில் படைப்பு, ஒடுக்கம் ஆகியவற்றின் தன்மை தெள்ளத் தெளிவாக விளங்குகின்றது. இறைவனே சங்காரநாதன் ஆவான். உயிர்களும், பிரபஞ்சக் கூட்டங்களும், தன்னிடம் ஒடுங்குவதற்கு காரணமாக இருப்பவனும் அவனே,

''ஆக்கம், அளவு, இறுதி, இல்லாய்!
அனைத்துஉலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய்,
அருள்தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய்
நின்தொழும்பில்''

என்கிறார் மணிவாசகப் பெருமான்

''அவன் அவள் அதுவெனும் அவை
மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்''

என்பது சிவஞானபோதத்தின் முதல் சூத்திரம்.

''ஆக்கி எவையும் அளித்(து)ஆசுடன் அடங்கப்
போக்குமவன் போகாப் புகல்''

என்பது திருவருட்பயன்.

இறை இயக்கத்திற்கு நோக்கம் உண்டு. நோக்கமின்றி நடப்பதில்லை. படைப்புக்கு காரணம் உண்டு. அதுபோல் சங்காரத்திற்கும் நோக்கம் உண்டு. கோடிக்கணக்கான உயிர்கள்



பல பிறவிகளில் வினைநுகர்ச்சியால் அயர்வடைகின்றன. தளர்கின்றன. அவை இளைப்பாற வேண்டும். இளைப்பாறுவதன் மூலம் உயிர்கள் பக்குவம் அடைகின்றன. பல பிறவிகளில் உயிர்கள் தங்களது அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி வினைகளைப் புரிகின்றன. அதன் பயனாக இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன. படிப்படியாக வினைநுகர்விலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்கிற உணர்வு பிறக்கிறது. இன்ப துன்பங்களை சமமாக எண்ணும் மனமுதிர்ச்சி ஏற்படுகிறது. இது இறைவன் அருளாலேயே நேரிடுகிறது. உள்ளம் நடுவு நிலைமையை அடைகிறது. இருவினை ஒப்பு நிகழ்கிறது. இதற்காக உயிர்கள் பல பிறவிகள் எடுக்க வேண்டும். பல உடல்களைப் பெற வேண்டும். பெறுவதற்கு முன் களைதல் நடக்க வேண்டும். இந்த மாற்றங்கள் நிகழ்வதற்கு ஒடுக்கம் தேவைப்படுகின்றது. சங்காரத்தினால் கன்ம மலம் பக்குவமடைகின்றது. இதனை நிகழ்த்தும் சங்காரகர்த்தா இறைவனே ஆவன். மூலக் குற்றமான ஆணவமலம் கழிய வேண்டும். கேவல நிலையில் ஆணவத்தோடு நிற்கின்ற உயிர் சகல நிலைக்கு வரும்போது இதை சாதிக்க இயலும். இதற்காக இறைவன் பிரபஞ்சத்தைப் படைக்கின்றான். பல பிறவிகளில் சேர்த்த கன்மமலத்தை உயிர்கள் தாங்கி வருகின்றன. இவையும் கழியப்பட வேண்டும். இதற்காகவும் பிரபஞ்சம் தேவை. மாயாமல பரிபாகம் நடப்பதற்காக உயிர்களும் உலகமும் சேர்ந்து தனு, கரண, புவன போகங்கள் நடைபெறுகின்றன. கடைசியில் கன்ம மல பரிபாகமும் நடைபெற வேண்டும். இந்த மலத்தை நீக்குவதற்காக இறைவன் சங்காரத் தொழிலை மேற்கொள்கிறான். நாம் சாப்பிடும் உணவு உறங்கும்போது ஜீரணிக்கப்படுவதுபோல உயிரின் ஒடுக்கத்தில் கன்ம மலம் பக்குவமடைகிறது. இதுவே சங்காரமாகும். சங்காரம் என்பதும் இளைப்பாறுதல் என்பதும் ஒன்றேயாகும். இந்த இளைப்பாறுதலின் நோக்கம் இறைவனைக் கண்ணுற்று வீடுபேறு பெறுவதேயாகும்.

''எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று
வீடுற்றேன்''
(திருவாசகம்)

இந்த சங்காரம் பல வகைப்படும். முதலாவதாக நித்திய சங்காரம். இதுவே தினப் பிரளயம் எனப்படும். உடம்பிற்கும், உள்ளத்திற்கும் ஓய்வு கொடுக்க மனிதன் தினந்தோறும் உறங்குவது நித்தியசங்காரமாகும். இந்த நித்தியசங்காரத்தில் உயிரானது கனவு, ஆழ்ந்த உறக்கம், துரியம், துரியாதீதம் ஆகிய நிலைகளில் சஞ்சரிக்கின்றது. விழிப்பு நிலையில் ஓடி, ஆடி வினைப்போகங்களை அனுபவிக்கும் உயிர் இளைப்பாறுவதற்காக சிற்சில கருவிகளை மட்டுமே பயன்படுத்தி இயங்கும் நிலை நித்தியசங்காரமாகும்.

அடுத்து ஆயுட்சங்காரம், ஒவ்வொரு உயிரும் உடலுடன் சேர்ந்து வாழ்ந்து

வாழ்வை முடித்துக்கொண்டு உடலை விட்டு வெளிக்கிளம்புவது ஆயுட்சங்காரமாகும். இதுவும் ஒருவகை உறக்கமாகும். இது விழித்தல் இல்லாத உறக்கம். இது ஓர் நெடுந்துயில், வாழ்வு விழித்திருப்பதைப் போன்றது. மரணம் உறங்குவதைப் போன்றது.

''உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

என்பது குறள்.

விழித்திருக்கும் நிலை சாக்கிரம். வாழ்வை சாக்கிரத்திற்கு ஒப்பிட்டால் மரணத்தை சாக்கிராதீதம் என்கிற நிலைக்கு ஒப்பிடலாம். ''வைத்த சங்காரமும் சாக்கிராதீதமாம்'' என்பார் திருமூலர்.

நித்தியசங்காரத்தின்போது உயிரானது தூலம், சூக்குமம் என்னும் இரண்டு உடல்களோடு ஒட்டாது நிற்கும். ஆயுட்சங்காரத்தில் உயிரானது தூல உடம்பைவிட்டு அகன்றுவிடும்.

இவற்றிற்கு அப்பாற்பட்டது சர்வசங்காரம். நித்தியசங்காரமும் ஆயுட்சங்காரமும் அந்தந்த உயிர்களுக்கு அவற்றின் வினைக்கேற்ப நிகழ்கின்றன. சர்வசங்காரத்தில் எல்லா உயிர்களும் கூட்டாக ஒடுக்கப்படுகின்றன. அதையே திருமந்திரம் சுத்தசங்காரம் என்கிறது. இந்த சர்வசங்காரத்தில் உயிரானது செயலற்று ஆணவ மலத்தில் அழுந்தி ஒடுங்கி நிற்கும். சர்வசங்காரத்தில் சூக்கும உடம்பும் அகன்றுவிடும். அதாவது எல்லா கருவிகளும் கழன்று விடுகின்றன. இந்த சங்காரத்தில் உயிர்கள் ஒரு தொழிலும் புரிவதில்லை. எனவே அதை திருமந்திரம் 'தொழிலற்ற கேவலம்' என்கிறது. இந்த சங்காரத்தில் எல்லா கருவிகளும் முற்றிலும் அழிந்து ஒழிவதால் தொழில்களுக்கு இடமில்லை.

இதுவரை விளக்கப்பட்ட நிலைகள் உயிர்களுக்கு காலக்கிரமத்தில் கிடைத்தாலும், இவற்றிற்கு மேலான நிலையும் ஒன்றுண்டு. அதைத் திருமூலர் ''உய்த்தசங்காரம்'' என்று அழைக்கின்றார். இறைவனின் பேரருள் பெற்று அந்த அருளிலே திளைத்து, கருவி கரணங்களை ஒழித்து வீட்டின்பமாகிய பேரின்பத்தில் ஒரு பிறவியிலேயே மூழ்கிக்கிடப்பதை உய்த்தசங்காரம் எனலாம். இந்த நிலையில் உயிர்கள் நீங்கா இன்பத்தில் கிடக்கும், இதுவே திருவருட்சங்காரம் இறைவன் அருளால் திருவடிப்பேறு பெறுதலாகும். இதுவேஉயிர்கள் அடைய வேண்டிய உண்மை நிலையாகும், சிவஞானச் செல்வர்கள் ஒரு பிறவியிலேயே பரன் அருளால் பிறத்தல், வாழ்தல், இறத்தல் என்கிற நிலைகளுக்கு அப்பால் உள்ள வீடு பேறு நிலையை அடைதல் உய்த்தசங்காரமாகும், ''உய்த்த சங்காரம் பரன் அருள் உண்மையே'' என்பது திருமந்திரம், ''தூங்கிக் கிடக்கும் நிலை'' என்று சித்தர்கள் இதனைக் கூறுவார்கள், இது மரணமும் அல்ல, செயல் இயக்கமும் அல்ல, இது சிவமாய் நின்று சிவத்துடன் பொருந்தியிருக்கும் நிலையாகும், வெறும் சொற்களால் விளக்க இயலாத நிலை, அனுபவித்தே இந்தப் பேரின்பத்தை அடைய வேண்டும். ''தூங்கிக் கண்டார் நிலை சொல்லுவது எவ்வாறே!'' (திருமந்திரம்), கருவி கரணங்களின் சேட்டைகளிலிருந்து விலகி, தான் என்கிற உணர்வு நீங்கி, 'சிவபோதம்' என்ற பேற்றினை பெற்ற காரணத்தால் 'இருந்தார் இழவு வந்து எய்திய சோம்பே' என்கிறார் திருமூலர்.

ஆக, நித்தியசங்காரம், ஆயுட்சங்காரம், சர்வசங்காரம் இவற்றின் வழியாக உயிர் பக்குவமடைந்து, மலங்களைக் களைந்து, இன்ப துன்பங்களில் நடுவுநிலைமை செலுத்தி சிவானுபவத்தில் தோய்ந்து உய்த்தசங்கார நிலையை அடைவது சங்காரத்தின் மாபெரும் நோக்கமாகும். இவற்றைப் பற்றிய திருமந்திரங்கள் பின்வருமாறு:

''நித்தசங் காரம் உறக்கத்து நீள்மூடம்;
வைத்தசங் காரமுஞ் சாக்கிரா தீதமாம்;
சுத்தசங் காரந் தொழிலற்ற கேவலம்;
உய்த்தசங் காரம் பரன்அருள் உண்மையே''
(திருமந்திரம்.....421)

''நித்தசங் காரம் இரண்டுடல் நீவுதல்;
வைத்தசங் காரமும் மாயாசங் காரமாம்;
சுத்தசங் காரம் மனாதீதந் தோய்வுறல்;
உய்த்தசங் காரஞ் சிவன் அருள் உண்மையே''
(திருமந்திரம்....422)

''நித்தசங் காரன் கருவிடர் நீக்கினால்
ஒத்தசங் காரம் உடலுயிர் நீவுதல்;
சுத்தசங் காரம் அதீதத்துள் தோய்வுறல்;
உய்த்தசங் காரம் பரனருள் உண்மையே''.
(திருமந்திரம்....423)

''நித்தசங் காரமும் நீடிளைப் பாற்றலின்
வைத்தசங் காரமும் மன்னும் அனாதியில்;
சுத்தசங் காரமுந் தோயாப் பரன்அருள்;
உய்த்தசங் காரமுன் நாலாம் உதிக்கிலே''.
(திருமந்திரம்..424)

முருகப் பெருமானுக்கும் சூரபதுமனுக்கும் கடுமையான போர் நடக்கின்றது. சூரபதுமன் ஆணவமலத்திற்கு மறுபெயர். ஆணவச்செருக்கோடு போர்புரிந்தான். பல வடிவங்களை எடுத்து முருகனைப் போரில் அழிக்க முயன்றான். ஆனால் முருகன் எல்லாவற்றையும் அழித்துவிடுகின்றான். முடிவில் சூரன் எல்லாம் அழிந்து தனியாக நிற்கின்றான். முருகப்பெருமானுக்கு சூரபதுமனை அழிக்க வேண்டும் என்கிற விருப்பம் இல்லை. சூரனை அவனது ஆணவமலத்திலிருந்து காப்பாற்றுவதே நோக்கமாகும். இங்கே முருகன் ஒரு நாடகம் நடிக்கின்றான். தனது உண்மையான வடிவத்தை சூரன் பார்த்த பிறகாவது பக்குவமடையமாட்டானா என்கிற ஆவல் முருகனுக்கு ஏற்பட்டது. சூரன் முருகப்பெருமானுடைய வடிவை பார்க்கப் பார்க்க பெரிய வியப்பு உண்டாகிறது. முருகனுடைய பேரழகும் பெருங்கருணையும் அவனுடைய உள்ளத்தை உருக்குகின்றது. இதுவரை முருகப்பெருமானுடைய அருமையைத் தெரிந்து கொள்ளவில்லையே என்று இரங்குகின்றான். பாதாதிகேசம் இறைவனுடைய அழகைப்பார்த்த சூரபதுமன் உடல் குன்றி, உள்ளம் கரைந்து, அன்பு பொங்க நெஞ்சத்தில் இறை இன்பத்தை நிரப்பி நிற்கின்றான். அந்த சில நேரத்தில் அவனுடைய

அகங்காரம் அவனை விட்டு அகலுகிறது. வெகுளி முற்றும் தீர்ந்தது. இதுவரை ஆணவக் கண்களால் உலகைப் பார்த்த சூரபதுமன் இப்பொழுது பிரபஞ்சம் முழுவதிலும் இறைவனுடைய வடிவைக் காண்கின்றான். நல்ல தவத்தினால் தான் பெற்ற பேறு என்றும் கருதுகின்றான்.

''போயின அகந்தை; போதம் புகுந்தன;
வலத்த வான
தூயதோர் தோளும் கண்ணும் துடித்தன;
புவனம் எங்கும்
மேயின பொருள்கள் முற்றும் வெளிப்படு
கின்ற; விண்ணோர்
நாயகன் வடிவம்கண்டேன்; நற்றவப்
பயன்ஈ தன்றோ?''

(கந்தபுராணம்)

முருகப்பெருமான் தனது நாடகத்தை முடித்துக் கொள்கின்றான். சூரனுடைய உள்ளத்திலும் பக்குவத்திற்கான வாய்ப்பு வந்துவிடவே சூரனை ஆட்கொள்ள முடிவு செய்கின்றான், மீண்டும் தனது குழந்தை திருவடிவத்தை எடுத்துக் கொள்கின்றான். உடனே சூரபதுமனிடம் பழைய ஆணவ மலமும், வெகுளியும், பகை உணர்ச்சியும் சேர்ந்து கொள்கின்றன. போர் தொடருகிறது. பெரிய கடலின் நடுவே சென்று சூரன் மாமர வடிவாக நிற்கின்றான். முருகனின் வேல் மாமரத்தை துண்டாக்குகிறது. சூரன் பழைய உருவத்தோடு முருகனுடன் மீண்டும் போரிடுகின்றான். வேலாயுதம் சூரனின் மார்பை கிழித்து இரண்டு கூறாக்க, ஒரு கூறு சேவலாகவும், மற்றொரு கூறு மயிலாகவும் வந்து எதிர்க்கின்றன. அவற்றை முருகப்பெருமான் தன் கருணை பொழியும் விழிகளால் பார்க்க பறவை வடிவத்தில் நின்ற சூரனின் ஆணவமலம் நீங்குகிறது. பகை உணர்வு மறைகிறது. சேவலைக் கொடியாகவும், மயிலை வாகனமாகவும் முருகன் ஏற்றுக்கொள்கின்றான். பொல்லாத சூரனுடைய ஆணவத்தை முருகப்பெருமான் மாற்றினான். சூரனை அடியோடு நாசம்செய்யவில்லை. தன்னுடைய தொண்டனாகவே ஆக்கிக்கொண்டான்.

சூரபதுமனின் வரலாறு ஆணவமல சங்காரத்திற்கு எடுத்துக் காட்டாகும். முருகப்பெருமானின் அருளால், அவனை யாசிக்கும் தீயவர்கள்கூட தங்கள் தன்மையை மாற்றிக் கொண்டு, அவன் சந்நிதியை அடைந்து பேரின்பம் அடையலாம் என்கிற உயர்ந்த தத்துவத்தை சூரசங்காரம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது என்பார் கச்சியப்பர்.

''தீயவை புரிந்தா ரேனும் குமரவேள்
திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத் தொல்கதி
அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ?
அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா
அருள்பெற் றுய்ந்தான்?''

(கந்தபுராணம்)

சிவபெருமானின் இடக்கையில் தீ இருக்கின்றது. தீ சங்காரத்தைக் குறிக்கும். ஆணவ மலமாகிய இருளை நீக்குவது, ஒளிமயமான பேரறிவினைத் தருவது ஆகியவை இறைவன் திருக்கையில் உள்ள தீயின் உய்த்த சங்காரத்தின் பணிகளாகும். செந்தழல் போல் திருமேனியை உடைய இறைவனே சங்கார காரணனாகின்றான். இந்தச் சங்காரத்தைச் செய்யும் கருவி நெருப்பாகும். அவன் சிரித்தாலும் நெருப்புப் பொறி எழுகிறது. சினந்தாலும் தீப்பொறி பறக்கிறது. அவனுடைய கையில் நெருப்பு எரிகிறது. கண்ணிலும் நெருப்பு. இறைவனே தீப்பிழம்பாக நிற்கின்றான். தீயுமே ஒரு அம்பாக எழுந்து தீப்பிரளயத்தைச் செய்கின்றது.

இதையெல்லாம் நினைத்துப் பார்க்கின்றார் காரைக்கால் அம்மையார். அக்கினிப் பிரளயத்தில் உலகெலாம் தீ மூண்டு நிறைந்து நிற்கின்றது. பிறகு அடங்கி விடுகிறது. பிரபஞ்சம் மீண்டும் தோன்றுகிறது. பிரளய காலத்தில் எரிந்த தீ இப்போது என்னவாயிற்று? காலாக்னியாகிய தீயை மற்ற காலங்களில், ஏழு உலகங்களில் மறைத்து வைத்தாயா அல்லது அந்தத் தீயை உனது திருக்கரத்தில் வைத்து பாதுகாக்கின்றாயோ? எனக்கு இந்த உண்மையை சொல்லி அருள வேண்டும் என்று இறைவனிடம் காரைக்கால் அம்மையார் உரிமையோடு கேட்கின்றார்.

''மறைத்துஉலகம் ஏழினிலும்
வைத்தாயோ? அன்றேல்
உறைப்போடும் உன்கைக்
கொண்டாயோ?-நிறைத்திட்டு
உளைந்துஎழுந்து நீஎரிப்ப
மூவுலகும் உள்புக்கு
அளைந்துஎழுந்த செந்தீ அழல்''

(அற்புதத் திருவந்தாதி)

காரைக்கால் அம்மையார் மேலும் சிந்திக்கின்றார். இறைவனது உள்ளங்கை சிவந்து இருக்கிறதே ஏன்? ஒருவேளை தீயை ஏந்துவதால் அந்தக் கரம் சிவந்துவிட்டதோ என்கிற எண்ணம் எழுகின்றது. ஆனால், இறைவனே தழல்வண்ணன் ஆயிற்றே. திருக்கையில் வைத்திருப்பது ஒரு சிறிய தீ அல்லவா? பெரிய தீயிடத்தில் இந்தத் திருக்கரத்திலுள்ள சிறிய தீ என்ன செய்யும்? தீயின் நிறம் செந்நிறமாகும். சிவபெருமானுடைய திருக்கரமும் செம்மையுடையது. தீயே தன் வடிவமாகக் கொண்டிருக்கும் இறைவனுடைய செம்மையே உள்ளங்கையில் சிவப்பை ஏற்றி இருக்க வேண்டும். காரைக்கால் அம்மையார் தன்னுடைய அன்புக் குழந்தையிடம் வினாவை எழுப்புவது போல் கேட்டு இறைவனிடம் உண்மையை வேண்டுகின்றார்.

''அழல்ஆட அங்கை சிவந்ததோ? அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ?—கழல்ஆடப்
பேயோடு கானில் பிறங்க அனல்ஏந்தித்
தீஆடு வாய், இதனைச் செப்பு''.

(அற்புதத் திருவந்தாதி)

# திருக்குடநீராட்டு விழா காணவிருக்கும் திருக்கழுக்குன்றம்

புலவர் வேதாசலம்

கயிலையில் பரமசிவம் வீற்றிருத்தல்

கயிலாய மலையில் உயரிய சிகரங்களின் மத்தியில் உள்ள ஒரு பெரிய சிகரத்தில் அமைந்த அம்பலத்தில், கற்பகமணித் தீபம் போன்று மகாமேருவைப் பார்க்கிலும் அகன்றதாகிய மண்டபத்தில், பளிங்கினால் ஆகிய மேடையில் செம்பொற்சுடர் வீசும் அரியணையில் சிவபெருமான் பார்வதி தேவியாருடன் திருவோலக்கம் கொண்டிருந்தார்.

திருமால் சிவபெருமானைத் தரிசித்தல்

அறநெறி உரைத்தருளிய பரமசிவனார் திருவோலக்கங் கொண்டிருக்கும் திருமுன்னைத் தொழ திருமால் பாற்கடலை விட்டு நீங்கிச் சென்று தானேறிவந்த கருடனை, முதற் கோபுரவாயிலின் புறத்தே நிறுத்திவிட்டு விரைவுடன் உள் சென்று, ஆனந்தத்தால் கண்களில் நீர்பெருக அரகர வென்று வீழ்ந்து வணங்கி நின்றனர்.

கருடன் பங்கமடைதல்

பெரிய விடைத்தேவர் இருக்கின்ற வாயிலினிடத்தில் நின்ற கருடன அந்த விடைத்தேவரை வணங்காதவனாய் அகந்தையுடன் நின்றான். அவ்வாறு நின்ற கருடனை நந்திதேவர் கண்களில் தீப்பொறியுண்டாகும்படி விழித்து நோக்கினார். கருடனானவன் ''எங்கும் சென்று இரந்துண்பவனுடைய வாகனமாகிய நீ கோபித்து என்னை என்ன செய்குவை'' என்று சொன்னான்.

நந்தி தேவர் தன்னை வணங்கவில்லை என்ற குற்றத்தை நினைக்கவில்லை. பரமசிவத்தை நிந்தித்த சொல்லாகிய தீயானது காதுகளின் வழியாகச் சிவ நிந்தை என்னுந் தீக்கொழுந்து உள்ளத்திலிருந்து கொதித்து மேலெழ, பரமசிவம் சர்வசங்கார காலத்தில் தோன்றும் வடிவத்தை யோத்து, கருடனைக் கொல்லுகின்றேன் என்று சிறிது சுவாசம் விட்டார். நந்திதேவர் விட்ட சுவாசக் காற்றில் பல காதம் உருண்டு செல்வதும் உள்வாஙகும் சுவாசக் காற்றால் அவர் நாசியில் அணுகுவதுமாகத் துன்புற்று திருமாலைத் தியானித்து முறையிட்டான்.

திருமால் கருடன் நிலையுணர்ந்து பரமசிவனாரிடம் நந்திதேவர் கோபத்தால் கருடன் துன்புறுவதினின்றும் காக்கும்படி வேண்டி அவர் கட்டளை பெற்று நந்தி தேவரிடம் வந்து கருடனை விட்டுவிடும்படி பரமசிவம் கூறியதாகக் கூறினார். நந்திதேவர் ''சிவநிந்தை செய்த இக்கருடனைக் கொன்றல்லது விடேன்' என மறுத்தனர். திருமால் பரமசிவத்திடம் சென்று நந்திதேவர் கருடனை விட்டிலர் எனறு பணிவுடன் விண்ணப்பித்தார். பரமசிவம் நந்தியை அழைத்து கருடனை விடும்படி கூறினார். நந்திதேவர், தேவர்களும் இத்திருமாலும் எனனுடன் போரிட்டாலும் சிவ நிந்தை செய்த இப்பாதகனைக் கொன்றல்லது சகிக்கிலேன் என்றனர். பரமசிவம் இப்போது இவனை விட்டுவிடு என்றருளினர். அக்கட்டளையை ஏற்று கருடனை விட்டுவிட்ட நந்தி தேவர் பரமசிவத்தின் கட்டளையை மறுத்துரைத்த கொடிய பாவத் திற்கஞ்சி நடுநடுங்கி அவர் திருவடிகளை வணங்கி 'அறிவில்லாத நான் தங்கள் கட்டளையை மறுத்துரைத்த பாவத்துக் குட்பட்டேன்; இப்பாவம் நீங்கும் வழியை அருளுங்கள்' எனறு வேண்டினார்.

பரமசிவனார் உருத்திர கோடி தலப் பெருமையைக் கூறி அங்குச் சென்று தவஞ் செய்யும்படி கூறி அனுப்பினர்.

வேதகிரி வரலாறு.

ஆதியில் பரமசிவனாரிடம் இருந்து தோன்றிய வேதங்கள் கயிலாய மலையை அடைந்து தாங்கள் தேவர்கள் பிரமன் மற்றும் முனிவர்கள் பலரால் பலவாறு பாகுபாடுற்று வருந்துவதாகவும் பூவுலகில் தாங்கள் தங்கள் ஆறங்கங்களோடு மலையாக இருப்பவும் அம்மலையின் கொழுந்து போன்று எழுந்தருளும்படியும் வேண்டித் துதித்தன. அவ்வாறே பரமசிவம் அருள்புரிய வேதங்கள் தங்கள் சகல பிரிவுகளுடன் மலையாயின. அம்மலையின் உச்சியில் சிவபெருமான் மலைக்கொழுந்தாய் எழுந்தருளினார்.

உருத்திர கோடியர் வரலாறு.

பலபுவனங்களையும் துன்புறுத்தி வந்த அவுணர்களை அழிக்க சிவபெருமான் தம் மேனியினின்று உருத்திர கோடியரைத் தோற்றுவித்தார். அவர்கள் சிவபெருமான் தோற்றத்துடன் விளங்கினார். அவர்கள் சிவபெருமான் கட்டளையிட்டருளியபடி அவுணர்களை அழித்து அண்டங்களைக் காத்து வந்தனர்.

திருமால் தேவர்களுக்குப் பாற்கடலைக் கடைந்து அமுதம் தருதற்கு மத்தாக மந்திரகிரியை பெயர்த்தனர். பெயர்த்த பாதாளத்திலிருந்து பல முகம் பல வடிவங்களுடன் அரக்கர்கள் தோன்றினர். அவர்கள் எங்கும் பரவி யாவரையும் துன்புறுத்தினர். தேவர்கள் அஞ்சி சிவபெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமான் உருத்திரகோடியரை அழைத்து அரக்கர்களைக் கொன்றழிக்குமாறு கட்டளையிட்டருளினார். உருத்திரகோடியர் சிவபெருமானைப் பணிந்து 'பெருமானே! இவர்கள் இப்பிறப்பில் அரக்கர்களாயினும் முற்பிறவியில் பெருந்தவம் செய்தவர்கள். இவர்களைக் கொல்வதால் உண்டாகும் பாவத்திற்கு அஞ்சுகிறோம்'' என்றனர்.

பரமசிவனார் இவர்களைக் கொல்லும் பாவம் வேதகிரியைப் பூசித்தால் நீங்கும் எனறருளிச் செய்தார். உருத்திர கோடியர் அவுணர்களை அழித்து வேதகிரித் தலத்தை நாடி வந்தனர். பரமசிவம் அவர்கள் முன் கோடி சிவலிங்கங்களாக இருந்தனர். உருத்திர கோடியர் மகிழ்ந்து வணங்கி நன்னீராலும் மலர்களாலும் பூசித்தார்கள். பரமசிவனார் விடைமீது பார்வதி தேவியாருடன் காட்சி தந்தனர். உருத்திரகோடியர் இறைவனை வணங்கி ''இறைவா! இந்தமலையுமதலமுமஎங்கள் பெயருடன் விளங்க அருள்செய்ய வேண்டும் என்றனர். சிவபெருமான் 'இந்தவேதகிரி உருத்திர கோடி கிரி என்றும், இத்தலம் உருத்திரகோடித் தலம் என்றும். எம்பெயர் உருத்திரகோட்டீசுவரர் என்றும் பார்வதி தேவியாரின் பெயர் பெண்ணினல்லாள் எனும் உருத்திர கோட்டீசுவரி என்றும், தீர்த்தம் உருத்திரகோடி தீர்த்தம் என்றும் வழங்கப்பெறும் என்றருளினன். அவர்கள் பாவம் நீங்கித் தம் பதம் எய்தினர். அன்று முதல் இப்பதிக்கு உருத்திரகோடித்தலம்' எனும் பெயருண்டாயிது.

(தொடர்ந்து வரும்)

# கந்தவேள் கருணை



## [34]

டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்

அசமுகன் இறந்தபின் எஞ்சியிருந்த அசுரத் தலைவர்கள் நால்வகைச் சைன்யங்களுடன் சென்று பூதப் படைகளுடன் கடுமையாகப போர் செய்தார்கள். இதனால் பூத சேனைகள் புறம கொடுத்து ஓடின. இலக்கம் வீரர்களில் ஒருவனான தண்டகன் அசுர சேனைகளின மீது மழை போல் பாணங்களை விடுத்தான். அந்தப் பாணங்களின் தாக்குதலில் அசுரர்களின் நால்வகைச் சேனைகளும சிக்கி அழிந்தன. உதிரம் பெருகி ஆறுபோல் ஓடியது. உயிர் பிழைதத அசுரர்கள், 'பிழைத்தால் போதும்' என்று திசை தெரிந்த பக்கம் சிதறி ஓடினார்கள்.

அசுர சேனைகள் சிதறி ஓடுவதைக் கண்டான் பானுகோபன். 'போரில் நானே முனனணிக்குச் செல்லாமல் சைனியங்களை மட்டும் முன்னால் அனுப்பியதால்தான் இந்த நிலை ஏற்பட்டது. சரி நடந்ததை நினைத்துப் பயனில்லை. இனி ஆக வேண்டியதைக் கவனக்க வேண்டும்" என்று எண்ணிய மகாவீரனாகிய பானுகோபன் தானே போருக்குச் செல்வதென்று முடிவு செய்து பூத சேனைகளுக்கிடையே புகுந்தான். வில்லை வளைத்துக் கணக்கற்ற பாணங்கலைப் பூதர்கள் மீது ஏவினான். பூத வீரர்கள் மலைகளைப் பெயர்த்து பானுகோபன் மீது எறிந்தனர். அந்த மலைகளையெல்லாம் பாணங்களினால் தகர்த்தான் பானுகோபன். ஆயிரங்கோடிப் பாணங்களைப் பூத சேனைகளின் மீது விடுத்தான். அதனால் பூத சேனையைச் சேர்ந்த வீரர்கள் பலர் இறந்தனர். உயிர் தப்பியவர்கள் வேறிடம் தேடி ஓடினார்கள்.

பூத வீரர்கள் சிதறி ஓடியதைக் கண்ட பூதப் படைத் தலைவன் உக்கிரன் ஆரவாரத்துடன் ஒரு தண்டாயுதத்தை எடுத்துக் கொண்டு போய் பானுகோபனை எதிர்த்துப் போரிட்டான். பானுகோபன் பெரிய வில்லாளி.

மைக்கின்ற மேனி நெடும்பூதனை வஞ்சன் வாளை
தைக்கின்றல வானுதி மாய்ந்து தளர்ந்து வீழ்ந்து
மெய்க்கின்ற இனபும் அறனும் விளையாது வாளாப்
பொய்க்கின்ற வன்கைப் பொருள் வல்லையில்
போவதே போல்

ஆயிரமாயிரம் பாணங்களை விடுத்தான் பானுகோபன். எடுக்கும்போது ஆயிரம், தொடுக்கும்போது இலட்சம், விடுக்கும்போது கோடியென்று பாணங்களைப் போட்டான். உக்கிரனிடம் வில்லே கிடையாது. அவன் தனது தோளை உலுக்கு விட்டான. 'மைக்கின்ற மேனி' என்ற பாட்டு கூறுவதற்கு 'கரிய மேனி' என்று பொருள். பானுகோபன் விடுத்த பாணங்களில் ஒன்றாவது கரிய மேனியை உடைய உக்கிரனின் உடலைத் துளைக்கவில்லை. பானுகோபன் விடுத்த எல்லாப் பாணங்களும் அவனது உடலில்

பட்டுக் கூர் மழுங்கி உதிர்ந்து விழுந்தன. பொய்யே பேசுகின்றவன் கையில் ஒரு காலத்தில் பொருள் சேர்கின்ற மாதிரி இருக்கும். ஆனால் நிற்காது. எந்த வழியாகப் போயிற்று என்றே தெரியாமல் அது மறைந்துவிடும். கடையர்களிடம் உள்ள பொருள் அறத்திற்கு உதவாது. அந்தப் பொருள் செல்லும் வழிகூடத் தெரியாமல போகின்ற மாதிரி பானுகோபன் விடுத்த பாணங்கள் என்னவாயின என்றே அறியாதபடி அழிந்து விட்டனவாம.

பானுகோபனுக்கும் உக்கிரனுக்கும் கடுமையாகப் போர் நடந்தது. பானுகோபனின் தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளையெல்லாம் உக்கிரன் அடித்துக் கொன்றான். பானுகோபன் வேறொரு தேரில் ஏறிக்கொண்டு பாணங்களை விடுத்து உக்கிரன, கையிலிருந்த தண்டத்தை ஒடித்தான்; உக்கிரன், பானுகோபனின் தேரை அலக்காகத் தூக்கி ஆகாயத்தில் எறிந்தான். அது சூரிய மண்டலம் வரை சென்றது. பானுகோபன் தன்னை நோக்கி வருவதைக் கண்ட சூரியன் அஞ்சியோடினான். முன்பு பானுகோபனால் துன்ப மடைந்தவனல்லவா சூரியன்? பானுவாகிய சூரியனிடம் கோபித்ததாலன்றோ அவனுக்குப் பானுகோபன் என்ற பெயரே உண்டாயிற்று?

உக்கிரனால் தூக்கியெறியப்பட்டு சூரிய மண்டலத்தை அடைந்த பானுகோபனின் தேர் அங்கிருந்து கனவேகமாகக் கீழே விழுந்தது. அதற்கும் உயிர் தப்பிய பானுகோபன், இமைப்போழுதில் தன்னைச் சமாளித்துக்கொண்டு உக்கிரனைத் தூக்கி ஆகாயத்தில் வீசினான். அவன் ஆகாயத்திலிருந்து கீழே விழும்போது பிரம்மாஸ்திரத்தை மார்பிலே ஏவினான். அதனால் உக்கிரன மயங்கி விழுந்தான்.

உக்கிரன் மயங்கி விழுந்ததைப் படை வீரன் தண்டி கண்டான். உடனே ஒரு மலையைப் பெயர்த்து பானுகோபன் மீது வீசினான். பானுகோபன் பாணங்களை விடுத்து அந்த மலையைத் தூள் தூளாக்கிவிட்டான். பானுகோபன் விடுத்த பாணங்களால் தாக்குண்ட தண்டி சோர்ந்து விழுந்தான். பூதப்படையைச் சேர்ந்த பினாசி ஒரு மலையைப் பெயர்த்துப் பானுகோபன் மீது எறிய முயன்றான். அவன் மீது ஆயிரம் பாணங்களை விடுத்தான் பானுகோபன். அதனால் பினாசியும் தளர்ச்சி அடைந்தான். மற்ற பூதசேனை வீரர்கள் சிறிது நேரம் பானுகோபனுடன் போர் புரிந்தார்கள். ஆனால் பானுகோபன் அவர்களைச் சிதற அடித்தான.

பூத சேனையைச் சேர்ந்த வீரர்கள் சிதறி ஓடுவதைக் கண்டதும் இலக்கம் வீரர்களும் பெருங் கோபத்துடன் பானுகோபன் மீது மழைபோலப் பாணங்களைப் பொழிந்தார்கள். பானுகோபன் ஆயிரம் கோடிப் பாணங்களை விடுத்து அவற்றை எல்லாம் ஒடித்தான். மேலும் ஆயிரங்கோடிப் பாணங்களை இலக்கம் வீரர்கள் மீது விடுத்தான. அவர்கள் அந்தப் பாணங்களை முறித்துப் பல பாணங்களை பானுகோபன் மீது ஏவினார்கள். பானுகோபன் மிகுந்த கோபத்துடன் எண்ணற்ற பாணங்களை இலக்கம் வீரர்கள் மீது விடுத்து அவர்கள் கையிலிருந்த விற்களையும் அழித்தான். இலக்கம் வீரர்களும் வேறு விற்களை எடுத்துக் கொண்டு பாணங்களை விடுத்தார்கள். பானுகோபனும் அளவற்ற பாணங்களை விடுத்தான். இலக்கம் வீரர்கள் உடலிலும் பாணங்கள் தைத்து அவர்கள் வருந்தினார்கள். பானுகோபன் இறுதியில் அவர்களை வென்று விட்டான்.

இலக்கம் வீரர்களும் பானுகோபனிடம் தோற்றதும் வீரகேசரி பானுகோபன் மீது பாணங்களை விடுத்தார். இருவருக்கும் கடுமையான விற்போர் நடந்தது. பானுகோபன் கடைசியாக நாராயணாஸ்திரத்தை வீரகேசரி மீது செலுத்தினான். அந்த அஸ்திரம் வீரகேசரியின் மார்பில் புகுந்தது. வீரகேசரி மயங்கி விழுந்தார். முருகப் பெருமானின் ஆணையினால்தான் அவரது ஆவி பிரியாமல் நின்றது.

பின்னர் பானுகோபனுடன் வீர மார்த்தாண்டர் கடும்போர் புரிந்தார். அவரது நெற்றியில் உடைவாளால் பானுகோபன் தாக்கினான். வீரமார்த்தாண்டர் மயங்கி விழுந்தார். வீர ராக்கதர் பானுகோபனை எதிர்த்துப் போரிட்டனர். பானுகோபன் அவர் மீது பிரம்மாஸ்த்திரத்தை விட்டு மயக்கினான். அதன்பின் வீராந்தகர், வீர மகேச்சுரா, வீரதீரர், வீரமகேந்திரர், வீரபுரந்தரர்—ஆகியவர்கள் பானுகோபனுடன் போர் செய்து தோல்வியுற்றனர்.

முன்பு பூதசேனைகளுடன போர் செய்து சிதறியோடிய அசுர வீரர்கள் பானுகோபன்போரில் வெற்றிமுகம் பெறுவதைக் கண்டதும் திரும்பி அவனிடம் வந்து சேர்ந்தார்கள். பானுகோபன் வீரவாகு தேவரை நோக்கி வந்தான். அதனைக் கண்ட வீரவாகுதேவர் கந்தனைத் தியானித்துக் கையில் வில்லை எடுத்துக் கொண்டார். தேரை வேகமாகச் செலுத்தும்படி கட்டளையிட்டார்.

வீரவாகுதேவர் வில்லை வளைத்து நாணை மீட்டினார். அந்த நாணொலி, தேவர்களுக்கு அமிர்தம் உண்பதைப் போலிருந்ததாம். வீரவாகு தேவருக்கு எதிராகப் பானுகோபன் தனது வில்லை வளைத்து ஒலி எழுப்பினால், அந்த ஒலி, தேவர்களுக்கு விஷத்தை உண்பது போன்றிருந்ததாம்.

வீரவாகுதேவருக்கும் பானுகோபனுக்கும் கடுமையாகப் போர் நடந்தது, இருவரும் ஆயிரக் கணக்கில் பாணங்களை மழைபோல் பொழிந்தார்கள். இந்தப் பாண மழையில் பூமியும் வானும், கடல்களும் மறைந்தன. அவர்களின் கடும்போரைக் கண்ட தேவர்களும் அசுரர்களும் அச்சத்தினால் பல திக்குகளிலும் ஓடினார்கள். வீரவாகு தேவர் சர்வசங்கார மூர்த்தியைப்போல் போர் புரிந்தார்; பானுகோபனின் தேரை அழித்தார். பானுகோபன் வேறொரு தேரில் ஏறிப் பாணங்களை விடுத்தான். பானுகோபனின் வில்லையும் வச்சிர கவசத்தையும் வீரவாகுதேவர் உடைத்துவ்ட்டார். பானுகோபனின் மார்பிலிருந்து உதிரம் பெருகி வழிந்தது. பானுகோபன் மார்பில் முன்பு ஏற்படுத்திய துளையின் வழியாக வீரவாகுதேவர் ஆயிரம் பாணங்களை வ்டுதது அவனது முதுகில் தொங்கிக் கொண்டிருந்த அம்பறாத துணியை அறுத்தெறிந்தார். அதனால் மனம் தளர்ந்த பானுகோபன், வில் வித்தையினால் இவனை வெற்றி கொள்ள முடியாது எனறு முடிவு செய்து கொண்டான்.

பானுகோபன் முன்பு பிரம்மதேவரிடமிருந்து மோகனாஸ்திரம் பெற்றிருந்தான். அந்த அஸ்திரத்தை எவர் மீதாவது செலுத்தினால். அதனால் தாக்கப்படுபவரின் அறிவு மயங்கும். அந்த அஸ்திரத்தை எடுத்து, ''நீ வேகமாய்ச் சென்று எதிரியின அறிவை மயங்கச் செய்து கொன்று விடுவாயாக'' என்று கூறி விடுத்தான பானுகோபன். பயங்கரமான அந்த அஸ்திரம் எங்கும் இருளைப் பரப்பி விரைந்து சென்றது. அந்த அஸ்திரம் சென்றபோது பூத சேனையைச் சேர்ந்த வீரர்கள்

பயந்து விழ்ந்தனர். பூதசேனைத் தலைவர்கள் மயங்கி விழுந்தனர். அஸ்திரம் நெருங்க நெருங்க இலக்கத்தெண்மரும் வீரவாகுதேவரும் மயங்கி விழுந்தனர். இந்த நிலையை ஆகாயத்திலிருந்து கவனித்த பானுகோபன் மயங்கி விழுந்தவர்கள் மீது ஏராளமான பாணங்களை விடுத்தான். பாணங்கள் தைத்ததால் அவர்களின் உடல்கள் சல்லடைக் கண்போலாகி விட்டன.

இலக்கத்தெண்மரும், பூதசேனைகளும் வீர வாகுதேவரும் அறிவு மயங்கிக் கிடந்ததை யாவு மறியும் முருகவேள் உணர்ந்தார்.

பானுகோபன் விடுத்த மோகனாஸ்திரத்தை எதிர்க்க அமோக அஸ்திரத்தை தமது மலர்க் கரத்தாலேயே எடுத்தார். ''பானுகோபன் விடுத்த மோகனாஸ்திரத்தின் சக்தியைக் கெடுத்து வெற்றி யுடன் திரும்பி வா'' என்று கூறி அதனை விடுத்தார். அந்த அஸ்திரம் விண் வழியே சென்று போர்க் களத்தை அடைந்து மோகன அஸ்திரத்தின மாயை யைக் கிரகித்துக் கொண்டது. வீரவாகுதேவரும் மற்றவர்களும தூக்கத்திலிருநது எழுவதுபோல் எழுந்தனர். முருகப் பெருமான் விடுத்த அஸ்திரம் தன் பணியை முடித்த பின பரமனிடமே திரும்பிச் சென்றுவிட்டது.

மயக்கம் தெளிந்தெழுந்த வீரவாகுதேவர், ''வஞ்சனையால் வலிமையைக் கெடுத்த பானு கோபனை உடனே கொல்லுவேன்' என்று எண்ணிப் பாசுபதாஸ்திரம் கையில் எடுத்து அதனை விடுப்ப தற்குச் சிந்தித்தார்.

மோகனாஸ்திரத்தினால் மயங்கி விழுந்த வர்கள் அறிவுதெளிந்து எழுந்ததையும் வீரவாகு தேவர் பாசுபதாஸ்திரம் விடுபபதற்குத் தயாரா யிருப்பதையும் அறிந்த பானுகோபன் ''இனி இங்கு நின்றால் பாசுபதாஸ்ரம் உயிரை மாய்த்து விடும்'' என்று உணர்ந்து அங்கிருந்து மாயமாக விண்ணில் சென்று மறைந்துவிட்டான். அசுர வீரர்களும் மறைந்து ஓடிவிட்டனர். மறைந்து செல்கின்றவனைக் கொல்வது யுத்ததர்மம் ஆகாது என்பதால் வீரவாகுதேவர் ஆயுதத்தை விடுக்காது இருந்துவிட்டார். ஓடி ஒளிந்ததே பகைவரின் தோல்விக்குச் சமமெனப் பூதர்கள் மகிழ்ந்தனர்.

இலக்கத் தெண்மரும், பூதவீரர்களும் சூழ வீரவாகு தேவர், ஜயசங்கம் ஊதிக்கொண்டு பாசறையை அடைந்தார். அங்கு எழுந்தருளி யிருந்த அருள்மூர்த்தியாகிய கநதவேளின் திருவடி களை யாவரும் நனறியுடன் தொழுதனர். யுத்த களத்தில் நிகழ்ந்தவற்றையெல்லாம் மகிழ்ச்சியுடன் செவி சாய்த்துக் கேட்ட செவ்வேட் பரமன், வீரர்களுக்கு விடைகொடுத்து அவரவர் விடுதி களுக்கு அனுப்பி வைத்தார்.

விண்ணில் மாயமாய் மறைந்த பானுகோபன பெருத்த அவமானத்துடன் புறக்கடை வழியாக மகேந்திரபுரிக்குச் சென்று தன் உடலில் ஏற்பட்டி ருந்த புண்ணுக்கு மருந்து தடவிக் கொண்டிருந் தான். உடலைப் புண் வாட்டியதைவிட அவமான மும், துக்கமும், பழியும் அவனது உள்ளத்தை அதிகமாக வாட்டிக் கொண்டிருந்தன.

போன மகன் வெற்றியோடு திரும்பி வரு வான் என்று சூரபன்மன் எதிர் பார்த்துக் கொண் டிருந்தான். பானுகோபன் வந்துவிட்ட செய்தி யைச் சேவகர்கள்தான் அவனிடம் தெரிவித்தார் களே தவிர பானுகோபன் சூரபன்மனடம் வர வில்லை. ''பானுகோபன் எங்கே''? என்று சேவ கர்களைக் கேட்டான சூரபன்மன். தோட்டத்துப் பக்கம் வந்துபடுத்திருக்கிறார்'' என்று சேவகர்கள் பதில் கூறினார்கள்.

சூரபன்மனின் உள்ளம் கொதித்தது. 'ஹும் இவனும் சிறுவன் தானே? போனால் போகிறது. நாளை நானே போகிறேன். அந்தக் கந்தனை எவ்வாறேனும் வென்று விரைவில் திரும்புவேன்' என்று தன்னைத் தானே தேற்றிக்கொண்டான் சூரன். மறுநாள் யுத்த ஏற்பாடுகளை எப்படி யெல்லாம் செய்ய வேண்டும் என்ற சிந்தனையில் ஆழ்ந்தான்.

மறுநாள் பொழுது புலர்வதற்கு முன் நித்திரை யிலிருந்து எழுந்த சூரபன்மன், நித்திய கருமங் களை முடித்துக் கொண்டான். சபா மண்டபம் சென்று சிம்மாசனத்தில ஏறி அமர்ந்தான். சேனைத் தலைவர்களும், அமைச்சர்களும் அவனைச் சூழ்ந் தார்கள்.

''நமது சேனைகளை அழைத்து வாருங்கள்'' என்று ஒற்றர்களிடம் கட்டளையிட்டான் சூரன். இரதகஜ துரகபதாதிகள் அடங்கிய பல வகை ஆயுதங்களை ஏந்திய இலட்சம் வெள்ளத்திற்கு மேற்பட்ட வீரர் படைகளைத் திரட்டி ஒற்றர்கள் அனுப்பினார்கள். அநதச் சைன்யங்கள் வீரமகேந் திர புரியைச் சூழ்ந்து ஆரவாரம் செய்தன.

சூரபன்மன் சிகரம் ஒன்றின் மீதேறி நான்கு திசைகளிலும்தனது பார்வையைச் செலுத்தினான். கதிரவனின் ஒளிக்கதிர்கள் பாய முடியாத அள வுக்கு நெரிசலாகக் குவிந்திருந்த சேனையைக் கண்டதும் அவன் உள்ளத்தை வாட்டிய துன்பம் பறந்தது. எதிரிகளை அப்போதே வென்றவன் போல் களிப்படைந்தான்.

சிகரத்திலிருந்து இறங்கி ஆயுதசாலைக்குச் சென்ற சூரபன்மன் சிவதனுசு, பாசுபதாஸ்திரம் போன்ற தெய்வாஸ்திரங்களை எடுத்துக் கொண் டான். அட்சய அம்பறாத் துணியை முதுகில் கட்டிக் கொண்டான். தலையில் வைர முடியைத் தரித்துத் தும்பை மாலை அணிந்து கொண்டுதேரில் ஏறினான். அண்டங்கள் அதிரக் கனைக்கும் குதிரைகள் கட்டப்பட்டிருந்த அந்தத் தேர் வாயு வேகத்தில் புறப்பட்டது. அசுர வீரர்களும் அமைச் சர்களும், நால்வகைச் சேனைகளும் அவனைத் தொடர்ந்தனர்.

சூரபன்மனின் தேர் அரண்மனை வாயிலைக் கடந்தது; சிங்கமுகாசுரனின் மகன் அதிசூரனும், தாரகாசுரனின் மகன் அசுரேந்திரனும் போர்க் கோலம் பூண்டு, சூரபன்மனிடம் வந்து அவனை வணங்கினார்கள். ''நீங்கள் இருவரும் தலைவராக இருந்து படைகளை அணிவகுத்துச் சென்று போர் புரியுங்கள்'' என்று அவர்களுக்குக் கட்டளையிட் டான் சூரபன்மன். அவர்கள் அவ்விதமே செய்தனர்.

பூமி அதிர அசுரப் படைகள் அணிவகுத்துச் சென்றன. புவியைத் தாங்கும்ஆதிசேஷன் தலையை நெளித்தான். அஷ்டமா நாகங்களும், திசை யானை களும் அஞ்சின. அணிவகுத்துச் சென்ற யானைகள் பிளிறிய ஒலி எண் திசைகளையும் கிழித்துக் கொண்டு பரவியது.

சூரபனமன் சதுரங்க சேனைகளுடன் போருக்கு வருவதை அறிந்த இந்திரன் கந்த வேளிடம் ஓடினான். கருணை நிறைந்தபெரு மானின் திருவடிகளை வணங்கி, ''எம்பெருமானே! சூரபன்மன் இலட்சம் வெள்ளம் சேனைகளுடன் போருக்கு வருகிறான். தேவரீர் சூரபன்மனை வென்று எங்கள் அரச உரிமைகளையும் பொன்னு லக வாழ்வையும் மீட்டுத்தர வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

(தொடரும்)

# திருநாவுக்கரசர்

மு. கிருட்டிணன், ஐ.ஏ.எஸ்., (ஓய்வு)

**தோற்றமும் இளமையும்**

திருமுனைப்பாடி நாடு, திருவாமூர், வேளாளர் குலம். குறுங்கோதையர் குடி, புகழனார் தந்தையார். தாய் மாதினியார், இவர்கள் மகள் திலகவதியார். மகன் மருள்நீக்கியார். திலகவதியாருக்கு பன்னிரண்டு வயது. கலிப்பகையாருக்கு மணம் பேசப்பட்டது. திருமணத்திற்குமுன் கலிப்பகையார் போருக்கு செல்ல வேண்டியதாயிற்று. போரில் இறந்துவிட்டார். இடையில் புகழனார் இறந்தார். மனைவி மாதினியார் உடன் கட்டைஏறி உயிர் நீத்தார். கலிப்பகையார் இறந்தசெய்தி கேட்ட திலகவதியார் உயிர்நீக்கத் துணிந்தார். மருணீக்கியார் இது அறிந்து அவருக்குமுன் தான் உயிர்துறக்கத் துணிந்தார். திலகவதியார் தம்பி வாழ வேண்டுமென்று விரும்பி தான் வாழ ஒத்துக்கொண்டு வாழ்ந்தார்.

**சமணமும் சைவமும்:**

மருணீக்கியார் உலகின் நிலையாமையை அறிந்து தம் செல்வத்தை எல்லாம் அறவழியில் செலவழித்தார். சமண சமயத்தில் ஈடுபாடு ஏற்பட்டு சமணரைச் சார்ந்து பாடலிபுத்திரத்தில் சமணர்களுக்குத் தலைவராகி தருமசேனர் என்ற பட்டத்துடன் வாழ்ந்துவந்தார். திலகவதியார் சிவநெறியில் தோய்ந்து தம்பியை சிவநெறிக்குத் திரும்பி வர அருள்புரிய வேண்டும் என்று சிவபெருமானை வேண்டினார். அதனால் சிவனருளால் தருமசேனருக்கு சூலைநோய் உண்டாயிற்று. அதைத் தாங்க முடியாமல் தமக்கையாரிடம் வருகிறார். தமக்கையார் திருஐந்தெழுத்தை ஓதி திருவெண்ணீற்றைக் கொடுத்து அணியச் செய்து வீரட்டானேஸ்வரிடம் அழைத்துச் செல்கிறார். ''கூற்றாயினவாறு'' என்று தொடங்கும் திருப்பதிகத்தினைச் சந்நிதிக்கு எதிரில் நின்று பாடியருளினார். கொடிய சூலை நோய் அக்கணமே நீங்கியது. சொல்வளம் நிறைந்த திருப்பதிகத் தொடையைப் பாடியருளியதால் சிவபெருமான் மகிழ்ந்து ''திருநாவுக்கரசு'' என உனதுபெயர் வழங்குவதாகுக என்று அசரிரியாக மொழியவுற்றார். அன்று முதல் சிவப்பணியில் உருத்திராக்கம் முதலிய சின்னங்களுடன் மிகவும் ஈடுபட்டு பதிகங்களைப் பாடி வந்தார். உழவாரப்படை கொண்டு கைத்தொண்டு செய்துவந்தார்.

**சமணர் சூது:**

இதனை அறிந்த சமணர்கள் தம் மதம் அழிந்துவிடும் என்று அஞ்சி மன்னனிடம் தருமசேனர் சூலைநோய் வந்ததாகப் பொய் சொல்லி சைவ சமயத்திற்கு சென்று விட்டார் என்றும் அவரைத் தண்டிக்கவேண்டும் என்று முறையிட்டனர். மன்னனும் சமண சமயப் பற்றினால் உண்மை அறியாது திருநாவுக்கரசரைப் பிடித்துக் கொண்டு வரும்படி ஆணையிட்டான். அமைச்சர்கள் திருநாவுக்கரசரை அணுகி அரசனிடம் வரும்படி வேண்டினர். ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்று திருத்தாண்டகம் பாடி அவர்களுடன் செல்ல மறுத்தார். எனினும் அவர்கள் அடி வணங்கி வேண்டிக் கொண்டதால் அவர்களுடன சென்றார்.

**நீற்றறை அனுபவம்:**

சமணர்கள் கூறியபடியே திருநாவுக்கரசரை நீற்றறையில் போடும்படி அரசன் கட்டளையிட்டான். வெந்தழலை ஒத்த நீற்றறைக்குள் அடைத்து தாளிட்டுக் காவல் செய்தனர். அவரோ சிவபெருமானின் கருணையையே நினைத்து ''மாசில் வீணையும்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிப் புகழ்ந்து கூறி இன்புற்றிருந்தார். ஏழு நாட்கள் கழித்து நீற்றறையைத் திறந்து பார்த்த போது அவர் தெளிந்த சிந்தையோடு எவ்வித ஊனமுமின்றி இருந்ததைப் பார்த்து அதிசயித்தனர்.

**விஷம் கலந்தபால் சோற்றை உண்ணச் செய்தல்**

சமணர்கள் கூறியபடியே அரசன் ஆணை பெற்று கொடிய விடம் கலந்தபால் சோற்றை இவரைஉண்ணும்படிசெய்தனர். அதனாலும் அவர் எவ்வித தீங்கும் அடையவில்லை. சிவபெருமான் அருளால் நஞ்சும் அமுதமாயிற்று. இதை அவருடைய''துஞ்சிருள்''என்று தொடங்கும் நனிப்பள்ளி தேவாரத்தால் விளக்குகின்றார்.

**மதயானையை இடறச் செய்தல்**

மீண்டும் சமணர்கள் சொன்ன வண்ணம் அரசருடைய மதயானையை ஏவிவிடச்செய்தனர். திருநாவுக்கரசர் சிறிதும் அஞ்சாது ''சுண்ணவெண் சந்தனச் சாந்தும்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். ஊழித்தீயைப் போல் வந்த யானை திருநாவுக்கரசரை வலம் வந்து நிலத்தில் வீழ்ந்து வணங்கி அப்பால் சென்று பாகவர்களைக் கொன்றும் அங்கிருந்த சமணர்களை மிதித்தும் கிழித்துக் கொன்றும் கலங்கச் செய்தது.

**கடலில் இட்டகல் தெப்பமாகியது**

மீண்டும் சமணர்கள் முறையிட்டபடியே திருநாவுக்கரசரை ஒருகல்லினோடு சேர்த்துக் கட்டி நடுக்கடலிலே தள்ளச் செய்தான் அரசன். நம் நாவுக்கரசர் அஞ்சாது ''சொற்றுணை வேதியன்'



என்று தொடங்கும் பதிகம்பாடி ''நமசிவாய'' என்று திருவைந்தெழுத்துப் பெருமையினைத் துதித்தருளினார்.

கல்தெப்பம் போல் கடலில் மிதந்தது. உடலைக் கட்டியிருந்த கயிறு அறுந்தது. திருப்பாதிரிப் புலியூர் அருகில் வருணன் கரை சேர்ந்தான். சிவபெருமானின் கருணையை வியந்து திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானிடம் சென்று வீழ்ந்து வணங்கி ''ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடித்துதித்தார். அங்கு சில நாட்கள் தங்கி திருமாணிக்குழி, திருத்தினைநகர் தலங்களை வணங்கி திருவதிகையை அடைந்தார்.

**பல்லவ அரசன் சைவனாதல்**

பல்லவ அரசன் சமணர்களின் சூழ்ச்சியை அறிந்து வெகுண்டு திருவதிகை வந்து நமது நாவுக்கரசரைப் பணிந்து சமண சமயத்தை விட்டு சைவனானான். பாடலிபுத்திரத்தில் இருந்த சமணர் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்துக்கொண்டு வந்து திருவதிகையில் ''குணபரவீச்சரம்'' என்னும் திருக்கோயிலைக் கட்டுவித்தான்.

**சூலமும் இடபமும் பொறிக்கப் பெறல்**

சிவத்தல யாத்திரை செய்ய விரும்பி திருவெண்ணெய்நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருப்பெண்ணாகடம் சேர்ந்தார். அங்குள்ள திருத்தூங்கானை மாடக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானைப் பணிந்து''பொன்னார் திருவடிக்கு'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி. சமண மதத்தில் ஊறியிருந்த உடலோடு தான் வாழ விரும்பவில்லை என்றும் அவ்வுடல் மேல் மூவிலைச் சூலம் பொறிக்கப்படவேண்டும் என்றும் இறைஞ்சினார். இறைவனும் அவ்வாறே எவரும் அறியாதபடி அவருடைய தோள்களில் ஒருசிவபூதத்தைக் கொண்டு சூலக்குறியையும் இடபக் குறியையும் பொறிக்கச் செய்தார்.

**தலயாத்திரை**

பிறகு பல நாட்கள் கழித்து திருவரத்துறை, திருமுதுகுன்றம் முதலிய தலங்களைத் தரிசித்து விட்டு தில்லைசென்று அங்கு அம்பலவாணனை வணங்கி பல பல பதிகங்கள் பாடி சில நாள் தங்கியிருந்தார். பிறகு திருவேட்களம், திருக்கழிப்பாலை சென்று திரும்பி தில்லையில் இருந்தார். திருஞானசம்பந்தரைப்பற்றி அடியார்கள் கூற அவரைத் தரிசிக்கவேண்டி திருநாரையூரைப் பணிந்து சீர்காழிசென்று திருஞானசம்பந்தர் எதிர் கொண்டழைக்க அவரைத் தரிசித்து வணங்கினார். இருவரும் சீர்காழிப் பெருமானை வணங்கினர். பல நாட்கள் இருவரும் ஒன்று கூடி அங்கிருந்தனர்.

திருஞானசம்பந்தரிடம் விடைபெற்றுக் கொண்டு சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கை வீரட்டம், திருநின்றியூர், திருநனிப்பள்ளி, திருச்செம்பொன்பள்ளி, திருமயிலாடுதுறை திருத்துருத்தி, திருவேள்விக்குடி, திருஎதிர்கொள்பாடி, திருக்கோடிகா முதலிய தலங்களைத் தரிசித்து விட்டு திருவாடுதுறை வந்து தங்கினார். பல நாட்கள் தங்கியபிறகு திருவிடைமருதூர், திருநாகேச்சரம், திருப்பழையாறை, ஆகியதலங்களைத் தரிசித்து திருசக்திமுற்றத்து திருக்கோயிலை அடைந்து பணிந்தார். அதுபோது ''உனது சேவடி அடையாளம்படும்படி எனதலைமேல் பொறித்து வைத்தருள்க''. என்னும் கருத்து கொண்ட திருப்பதிகம் பாடினார். சிவபெருமான்

''திருநல்லூருக்கு வா'' என்று அருளினார். அவ்விதமே மகிழ்ச்சியோடு திருநல்லூரை அடைந்தார்.

### திருவடி தீட்டை பெறுதல்

திருநல்லூர் பெருமானைக் கீழே வணங்கி எழுந்தபோது ''உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்'' என்று அருள அவருடைய சென்னியின் மேல தமது பாதமலர்களைச் சூட்டினார். இதனை வியந்து ''நினைத்துருகும் அடியாரை'' என்று தொடங்கும் திருத்தாண்டகம் பாடினார்.

அங்கிருக்கும் நாட்களில் திருக்கருகாவூர், திருவாவூர்ப் பசுபதிச்சரம், திருப்பாலைத்துறை முதலிய தலங்களுக்குச் சென்று திரும்பினார். பிறகு திருப்பவழத்தைப் பணிந்து திங்களூரை அடைந்தார்.

### திங்களூரில் அற்புதச் செயல்

அவ்வூரில் அந்தணர்களுள் சிறந்த அப்பூதி அடிகளார் தமது புதல்வருடன் கலைகள், குளம், கிணறு, தண்ணீர்ப்பந்தல் முதலிய பல தருமங்களையும் திருநாவுக்கரசரைப் பார்க்காமலே அவரிடம் அன்பு பூண்டு அவர் பெயரால் அமைத்து ஒழுகி வருதலை அறிந்து அவரது மனைக்குச் சென்றார். அவர் இல்லத்தில் திருவமுது கொள்ள இசைந்தார். அவருக்கு உணவு படைக்க மூதத திருநாவுக்கரசு என்ற தன் மூத்தமகனை வாழையிலை ஒனறு அறுததுக்கொண்டுவரும்படி ஏவினார். அவ்வாறு தோட்டத்திற்கு சென்று இலையை அறுக்கும்போது அரவம் தீண்டிவிட்டது ஓடோடி வந்து இலையை தாயிடம் கொடுத்துவிட்டு சாய்ந்தான். விஷய மறிந்து திருநாவுக்கரசுக்கு அமுது படைக்க வேண்டுமென்று அவன் உடலை மறைத்துவைத்து அமுது படைக்க முனைந்தார் சிவபெருமான திருவருளால மனம் தடுமாற்றம் அடைந்து நடநத செய்தியை அறிநது அவன் உடலை திருககோவிலின முனபு கொண்டுவரச் செய்து ''ஒன்று கொலாம்'' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார். புதல்வன் விஷம நீங்கப்பெறறு உயிர்பெற்று எழுந்தான். பிறகு திருவமுதுஉண்டு சிலநாட்கள் தங்கியிருந்தார்.

### மீண்டும் தல யாத்திரை

திங்களூரிலிருந்து திருப்பழனம் சென்று வணங்கி திருச்சோற்றுத்துறையை தரிசித்துவிட்டு திருப்பழனத்தில் பல நாட்கள் தங்கியிருந்தார். பின் திருநல்லூரை அடைந்தார். திருப்பணிகள் செய்தார். சிலநாட்கள் கழித்து திருவாரூருக்குச் செல்லவிரும்பி திருப்பழையாறை, திருவலஞ்சுழி, திருக்குடமூக்கு, திருச்சேறை, திருக்குடவாயில், திருநறையூர், திருவாஞ்சியம், திருப்பெருவேளூர் திருவிளமர் முதலிய தலங்களில் சிவபெருமானை வணங்கி வழிபட்டு திருவாரூரைச் சேர்ந்தார்.

அங்கு காலங்கள் தோறும் புற்றிடங்கொண்ட பெருமானைத் தவறாது வணங்கி உழவாரப்பணி செய்து கொண்டிருந்தார். அங்கிருந்தபடியே திருவலிவலம், திருக்கீழ்வேளூர், திருக்கன்றாப்பூர் முதலிய திருத்தலங்களுக்குச் சென்று வணங்கி வந்தார். திருவாதிரை அன்று தியாகேசப்பெருமாள் பவனிவரும் கோலத்தைக் கண்டு மகிழந்தார். பிறகு திருப்புகலூர் செல்ல விரும்பி புறப்பட்டுச் சென்றார். அங்கு மீண்டும் திருஞானசம்பந்தரைச் தரிசித்து திருவாரூர் பெருமையை அவருக்கு எடுத்துரைத்தார். அதைக் கேட்ட திருஞானசம்பந்தர் திருவாரூருக்குச் சென்றார். அப்பர் சுவாமிகள் திருப்புகலூர்ப் பெருமானுக்குச் செந்தமிழ்ப் பாமாலைகளைச் சூட்டி வணங்கி திருப்பணிகள் செய்து வந்தார். திருசெங்காட்டங்குடி, திருநள்ளாறு, திருச்சாத்தமங்கை, திருமருகல் என்னும் திருப்பதிகளை வணங்கிக் கொண்டு தங்கியிருந்தார்.

திருஞானசம்பந்தர் திருவாரூர் சென்றுதிரும்பி வந்தபிறகு முருகநாயனார் திருமடத்தில் இருவரும் தங்கியிருந்தார்கள். சிறுத்தொண்ட நாயனாரும், திருநீலநக்க நாயனாரும இவர்களுடன் சேர்ந்திருந்தனர். சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் சென்று விட்டார்கள். பிறகு திருஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் சேர்ந்து திருவம்பர், திருக்கடவூர் சென்று வழிபட்டு குங்கிலியக்கலிய நாயனார் திருமடத்தில் உணவருந்தி தங்கிப் பிறகு திருக்கடவூர் மயானம், திருஆக்கூரில் தான்தோன்றிமாடம் வணங்கி திருவீழிமிழலையை அடைந்தனர்.

### படிக்காசு பெறுதல்

அங்கு தங்கியிருந்தபோது பருவமழை தவறியது. காவிரியாறும் வற்றியது. நாட்டில் விளைவு குன்றியது. மக்கள் வறுமையால் வாடினார்கள். நாட்டில் பசி மிகுந்து பஞ்சம் பெருகியது. இருவர் கனவிலும் சிவபெருமான் தோன்றி அடியார்களுக்கு உணவு அளிக்கும் பொருட்டுப் படிக்காசு வழங்குவதாகக் கூறினார். அவ்வாறே இருவருக்கும் படிக்காசு கொடுததுவந்தார். அதைப்பெற்று பண்டங்களை வாங்குவித்து சிவனடியார்களுக்கு அமுது படைத்துவந்தனர். திருஞானசம்பந்தருககு வாசியுடன் (வாசி-வட்டம்) காசு கொடுததார். சிவபெருமானிடத்துக்கைத்தொண்டு புரிந்துவந்ததால் வாசியில்லாத காசை திருநாவுக்கரசருக்கு அளித்து வந்தார். பிறகு மழை பொழிநது பொருள்கள் நிறைய விளைந்து பஞ்சம நீங்கி வளம் பெருகியது.

இருவரும் மிழலை நாதருக்கு பாமாலைகள் பல சாத்தி அங்கிருந்து புறப்பட்டு திருவாஞ்சியம் முதலிய தலங்களைத் தரிசித்து திருமறைக்காடு சென்றனர்.

### திருக்கதவைத் திறத்தல்

திருக்கோயிலுள் இருவரும் சென்றபோது திருவாயில் அடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அங்குள்ளவரை வினவினர். முன்னொரு காலத்தில் சிவபெருமானை வேதங்கள் அர்ச்சித்து வழிபட்டு திருவாயிலை திருக்காப்பிட்டுச் சென்றன. இந்நாள்வரை திறக்கப்படாமல் உள்ளன என்றனர். இதனைக்கேட்ட திருஞானசம்பநதர் அப்பரை "கதவு திறக்கும்படி பதிகம் பாடுக' என்று அருளினார். திருநாவுக்கரசர் ''பண்ணினேர் மொழியாள்'' எனத்தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். கதவுதிறக்க காலதாமதம் ஆவதைக் கண்ட அவர் ''இரக்க மொன்றிலீர்'' என்று திருக்கடைக்காப்பிலே பாடி வணங்கினார். உடனே கதவும் திறக்கப்பட்டது. இறைவன் கருணையை வியந்து வணங்கி போற்றி உள்ளே சென்று பாமாலை பாடி மகிழ்ந்தார்கள்.

வெளியே வரும்போது திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரை கதவு மீண்டும் அடைக்கும்படி பதிகம் பாடும்படி வேண்டினார். அவ்வாறே அவர் பாடிய முதற்பாட்டு முடிந்த உடனே கதவு மூடிக்கொண்டது. அதுமுதல் திருவாயில் கதவு திறக்கவும் மூடவும் வழக்கமாக நடந்து வந்தது.

அன்று இரவு திருநாவுக்கரசர் தாம் பாடியதற்கு காலதாமதமாகக் கதவு திறந்ததையும் திருஞானசம்பநதர் முதற்பாட்டு பாடி முடித்த உடனே

கதவு மூடிக்கொண்டதை நினைந்து கவலையடைந்து துயில் கொண்டார்.

### திருவாய்மூரில் காட்சி கொடுத்தல்

அவர் கனவில் இறைவன் வெண்ணீறு அணிந்த கோலத்தோடு எழுந்தருளி ''நாம் திருவாய்மூரில் இருப்போம்; அங்கு எம்மைத் தொடர்ந்து வா'' என்று அருளி மறைந்தார். உடனே துயில் நீங்கி ''எங்கே என்னை'' எனறு தொடங்கும் திருப்பதிகம் பாடி திருமறைக்காட்டை விட்டு திருவாய்மூருக்குப் புறப்பட்டார். இறைவன் முன வந்த கோலத்தோடு முன்னால் நடந்து வழிகாட்டிக் கொண்டு சென்று எதிரே ஒரு பொற் கோயிலைக் காட்டி மறைந்துவிட்டார். அக்கோயிலை நோக்கி நடந்தார். அதற்குள் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் திருவாய்மூருக்குச் சென்றார் என்று அறிந்து அவரும் அங்கு போய்ச் சேர்ந்தார். இறைவன் மறைந்ததை திருஞானசம்பந்தரிடம் கூறி வருந்தினார். உடனே திருஞானசம்பந்தருக்கு இறைவன் காட்சி தந்தார். அவர் இக்காட்சியை திருநாவுக்கரசருக்குக் காட்டினார். அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்து பாடி ''அடியார்பரவக்கண்டேன்'' என்று தொடங்கும்திருப்பதிகம் பாடினார். இப்பதிகத்தை ஏற்றுக்கொண்டு இறைவன் மறைந்தார். இருவரும் கோவிலை வணங்கி சில நாட்கள் அங்கு தங்கியிருந்து திருமறைக்காட்டிற்குத் திரும்பினார்கள்.

### திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டிற்குச் செல்லல்

பாண்டிநாட்டு மன்னனின் மாதேவி மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் அனுப்பிய சிலர் திருஞானசம்பந்தரை வணங்கி பாண்டி நாட்டில் சமணர்களின் கொடுமைகளைப் பற்றிக் கூறினர். அதை அறிந்த அவர் அவர்களின் கொடுமையை தானே சென்று போக்கி ஆதி சைவ நெறி விளங்கச் செய்யவேண்டுமென்று துணிவுகொண்டு புறப்பட திருவுளங் கொண்டார். சமணர்களால் தாம் அடைந்த துன்பங்களைக் கூறி திருநாவுக்கரசர் போக வேண்டாம் என்று தடுத்தார். ஆனால் திருஞானசம்பந்தர் சமணர்களின் தீய வஞ்சனைகளையெல்லாம் இறைவனருளால் அழிப்பேன் என்று சொல்லி அவர் உடன் வருதல் வேண்டாம் என்று கூறித் தனியாகப் புறப்பட்டுச் சென்றார்.

### மீண்டும் யாத்திரை தெர்டர்தல்

திருமறைக்காட்டில் சில நாள் தங்கி திருவீழிமிழலைக்குச் செல்லவிரும்பி திருநாகைக்காரோணம் முதலிய பதிகளை வணங்கி பாமாலை பாடித் துதித்து திருவீழிமழலையை அடைந்தார். அங்கு பெருமானை வணங்கிவிட்டு திருவாடுதுறை முதலிய தலங்களையும் வழிபட்டு பழையாறை அடைந்தார்.

### பழையாறை வடதளியில் உண்மை சிவலிங்கத்தை வெளிப்படுத்துதல்

திருப்பழையாறை திருக்கோயில் வடதளியில் சிவலிங்கததை வணங்கச் சென்றபோது அங்குள்ளவர்கள் உண்மையான சிவலிங்கத்தைச் சமணர்கள் மறைத்து வைத்துவிட்டார்கள்எனறு கூறினார்கள். திருநாவுக்கரசர் சிவபெருமானை நினைந்து உண்மை உருவத்தைக் கண்டாலன்றி மேலே போக மாட்டேன் எனறு கூறி பட்டினி கிடந்தார். சிவபெருமான் சோழமன்னன் கனவில் இந்த செய்தியைத் தெரிவித்து சமணர்களை அழித்துத் தனக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என்றுகட்டளை ஆவித்தார். அவ்விதமே சோழமன்னன் கனவில் இறைவன் சொன்ன அடையாளங்களைப் பின்பற்றி வந்து சமணர்கள் மறைத்து வைத்திருந்த சிவனுருவத்தைக் கண்டெடுத்து வடதளியில் விமானம் அமைத்து திருப்பணி செய்து சிவபெருமானை எழுந்தருளச் செய்து வழிபாட்டிற்கு வேண்டிய நிபந்தங்களை வைத்தான். அதன் பிறகு திருநாவுக்கரசர் ஆலயத்தினுள் சென்று ''தலையெலாம் பறிக்கும்'' என்று தொடங்கும் பதிகம் பாடிப் பணிந்தார். இக்காலத்தில் மகாத்மா காந்தியடிகள் செய்து காட்டிய சத்தியாகிரகத்தை அந்த நாளிலேயே திருநாவுக்கரசர் கடைப்பிடித்து பழைய சிவலிங்கத்தை எழுந்தருளச் செய்து வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

### யாத்திரை தொடர்தல்

சிலநாள் திருப்பழையாறையில் தங்கி பிறகு காவிரி ஆற்றின் இருகரைகளிலும் உள்ள பல சிவத் தலங்களை தரிசித்து தமிழ்மாலை பலவும் சாத்தி திருவானைக்காவை அடைந்தார். தொடர்ந்து சென்று திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி, திருக்கற்குடி, திருப்பராய்த்துறை முதலிய பிற தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருப்பைஞ்நீலியை நோக்கிச் சென்றார்.

### பொதிசோறு பெறுதல்

அப்போது அவர் பசியினாலும் நீர் வேட்கையினாலும் வருந்தினார். சிவபெருமான் தமது தொண்டரின் வருத்தத்தைப் போக்கத் திருவுள்ளங் கொண்டு அவர் வரும் வழியில் ஒரு சோலையையுங் குளத்தையும் உண்டாக்கி அந்தணர் உருவில் பொதி சோறுடன் காத்திருந்தார். திருநாவுக்கரசர் சோற்றை உண்டு இளைப்பாறச் செய்தார். இறைவன் திருவருள் என்று சோற்றை வாங்கி உண்டு நீரைப் பருகி தமது களைப்பைப் போக்கிக்கொண்டார். தானும் திருப்பைஞ்நீலிக்குச் செல்வதாக அந்தணர் அவரை அழைத்துச் சென்று ஊரை அடைந்த உடன் மறைந்துவிட்டார். அந்தணர் இறைவனே என்று தெரிந்து இறைவன் கருணையை வியந்துபோற்றிதிருக்கோயிலை அடைந்து திருப்பதிகள் பாடி வணங்கினார். சிலநாள் அங்கேயே தங்கியிருந்தார்.

### யாத்திரை தொடர்தல்

பிறகு திருவண்ணாமலை, திருவோத்தூர் முதலிய பதிகளைத் தரிசித்து காஞ்சிபுரம் அடைந்தார். அடியார்கள் கூட்டமாக அவரை வரவேற்றார்கள். அங்கு திருவேகம்பரை வணங்கிப் பதிகம் பாடினார். உழவாரத் தொண்டினைச் செய்து கொண்டு திருக்கச்சிமயானம், திருமேற்றளி, திருமாற்பேறு சென்று வணங்கினார். பிறகு திருக்கழுக்குன்றம், திருவான்மியூர், திருமயிலாப்பூர், திருவொற்றியூர் சென்று இறைவனின் திருமுன்பு வணங்கி ''வண்டோங்கு செங்கமலம்'' என்று தொடங்கும் திருத்தாண்டகம் பாடினார். பிறகு திருப்பாசூர், பழையனூர், திருவாலங்காடு, திருக்காரிக்கரை தலங்களை தரிசித்து திருக்காளத்தியைச் சேர்த்து திருக்காளத்திநாதரை வணங்கி ''என்கண்ணுள்ளான்'' என்றதிருத்தாண்டகத்தைப் பாடி அருளினார். திருக்கண்ணப்ப நாயனாரையும் வணங்கி திருப்பணிகளைச் செய்து கொண்டிருந்தார்.

### திருக்கயிலை யாத்திரை

திருக்காளத்தி இறைவரை வழிப்பட்ட குறிப்பினால் திருக்கயிலைமலையில் இறைவன் பெருங் கோலத்தைக் காண விரும்பி வடதிசையை நோக்கிப் புறப்பட்டார். இடையில் திருப்பருப்பதம்

(ஸ்ரீசைலம்) என்னும் தலத்தில் பதிகம்பாடி வழிபட்டார்., தெலுங்குநாடு, கன்னடநாடு, மாளவநாடு, இலாட நாடு, மத்தியநாடு கடந்து வாரணாசியை அடைந்து அங்கு எழுந்தருளியிருக்கும் அகிலநாதனை வணங்கி உடன் வந்த அடியார்களை அங்கேயே விடுத்து தனியாகத் திருக்கயிலாயத்தை நோக்கி நடந்தார். கரடுமுரடான கல்பாதைகளில் கால் தேய்ந்தன. பிறகு இரண்டு கைகளைக் கொண்டு தடவித்தடவிச் சென்றார். கைகளும் தேய்ந்து சிதைவுற்றன. பாலைவனத்தையும் கடக்க வேண்டியிருந்தது. பிறகு மாா பினால் வருந்தி உந்திச் சென்றார். மார்பின் சதையும் சிதைந்து சிதறி மார்பு எலும்புகளும் முறிந்தன. பிறகு உடலால் புரண்டு புரண்டு சென்றார். உடல் முழுவதும் தேய்ந்து போயிற்று. மேலும் செல்ல முடியாதவராய் செயலற்று அவ்வழியில் கிடந்தார்.

திருநாவுக்கரசர் மேலும் தீந்தமிழ்ப்பாடி போற்றிடவேண்டும் என்று கருதி சிவபெருமான் அவர் கிடந்த இடத்தில் தடாகம் ஒன்றைத் தோற்றுவித்து முனிவர் வேடம்பூண்டு அவர்முன் சென்று எதற்காக இக்கொடிய காட்டிற்கு வந்தீர் என வினவினார். கயிலையில் சிவபெருமான் மலைமகளுடன் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் காண வந்தேன் என்றார். தேவர்களும் அணுக முடியாத கயிலைமலையை மானிடர்கள் அடைதற்கு எளிதல்ல. திரும்பிச் செல்வதே கடன் என்று கூறினார். திருக்கயிலாய்க் கோலத்தைக் கண்டாலன்றி அழியும் இவ்வுடலைக் கொண்டு மீளேன் என்று திருநாவுக்கரசர் மறுத்தார். முனிவர் ஆகாயத்தில் மறைந்து ''எழுந்திரு'' என்று அசரீரியாகக் கூறினார். ஊறுபாடுகள் முற்றும் நீங்கிய திருமேனியுடன் எழுந்து ''அடியேன் கயிலாயத் திருக்கோலத்தை கண்ணாற் கண்டு தொழும்படி அருள்புரிவீராக'' என்று வேண்டினார். மீண்டும் இறைவன் அசரீரியாக ''இத்தடாகத்தில் மூழ்கி திருவையாற்றையடைந்து அங்குநம் திருக்கயிலாயக்காட்சியைக் காண்பாயாக'' என்று பணித்தருளினார். அவ்வாறே ''வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி'' என்று தொடங்கும் திருத்தாண்டகம் பாடித் துதித்து ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டே அத்தடாகத்தில் மூழ்கினார். திருவையாற்றுத் தடாகத்தில் உலகர் எல்லோரும்வியக்கும்படி தோன்றிக் கரை ஏறினார். ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். பிறகு ஐயாறப்பர் திருக்கோயிலின்முன் வந்தார். அக்கோயிலே திருக்கயிலைமலை போலத் தோன்றிற்று. திருக்கயிலாய சூழ்நிலைகளைக் கண்டுகொண்டே வந்து வெள்ளி மலையின் மேல் உமாதேவியாருடன் வீற்றிருந்த சிவபெருமானைக் கண்டார். வீழ்ந்தார். வணங்கினார். கூத்தாடினார். பாடினார். கண்ணீர் சொரிந்தார். திருத்தாண்டகங்களை இன்பம் பெருகப்பாடி மகிழ்ந்து துதித்தார்.

இந்நிலையில் இறைவர் கயிலைக் கோலத்தினை மறைத்தருளினார். திருநாவுக்கரசர் திகைத்தார். வருந்தினார். இதுவும் சிவன் திருவருள் என்று தெரிந்து'' மாதர் பிறைக்கண்ணியானை'' என்னும் திருப்பதிகம் பாடித் தொழுதார். அங்கு தங்கி பல பதிகங்களைப் பாடி வணங்கினார். பல நாள் தங்கி உழவாரப் பணி செய்து கொண்டிருந்தார்.

### திருப்பூந்துருத்தியில் திருமடம் அமைத்தல்

பின்னர் திருநெய்த்தானம், திருமழபாடி, முதலிய தலங்களை அடைந்து பதிகங்களைப் பாடி பிறகு திருப்பூந்துருத்தியை அடைந்து சிவபெருமானை வணங்கினார். சிலகாலம் அங்கு தங்க வேண்டும் என்று திருவுள்ளங் கொண்டு ஒரு திருமடத்தினைக் கட்டினார். பல திருப்பதிகங்களை அருளி இறைவனைப் போற்றி அங்கு தங்கியிருந்தார்.

## இனியன் இறைவனே

கனியினும் கட்டிப் பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழல் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளும் அரசினும்
இனியன் தன்அடைந்தார்க் கிடைமருதனே

—திருநாவுக்கரசு.

### திருஞானசம்பந்தர் மூன்றாம் முறை சந்திப்பு

திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டில் சைவ சமயத்தை மீண்டும் நிலைபெறச் செய்துவிட்டு சோழநாட்டிற்குத் திரும்பி திருநாவுக்கரசரைக் காணவேண்டுமென்று திருப்பூந்துருத்திக்கு வருகிறார். மகிழ்ச்சியடைந்து அவரை எதிர்கொண்டு அழைக்கச் சென்றார். யாரும் காணாத நிலையில் திருஞானசம்பந்தர் ஏறிவந்த முத்துச்சிவிகையை தாங்குபவர்களோடு தானும் தாங்கி வந்தார். ஊருக்கு அருகேவந்தபோது''அப்பர் எங்குற்றார்'' என்று திருஞானசம்பந்தர் வினவ திருநாவுக்கரசர் ''உமது திருவடிகளைத் தாங்கும் பெருவாழ்வு கிடைக்கப்பெற்று இங்கு உற்றேன்'' என்று கூறியருளினார். உடனே பிள்ளையார் விரைந்து கீழே இறங்கி அவரை வணங்குவதற்குமுன் திருநாவுக்கரசர் அவரை வணங்கினார். இருவரும் அவ்வூரில் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கித்துதித்தனர்.

### இறைவன் சேவடியின் கீழ் மீளாது அமர்தல்

பாண்டி நாட்டுத் தல யாத்திரைக்குப்பின் திருப்புகலூரில் நாடோறும் திருமுன்றிலில் உழவாரப்பணிசெய்து கொண்டு பல வகையான பதிகங்களைபாடி வணங்கி துதித்து வாழ்ந்துவந்தார். திருநாவுக்கரசரின் பற்றற்ற நிலையை பரமனார் உலகுக்குக்காட்ட விரும்பி உழவாரப்பணி செய்யுமிடங்களில் கிடக்கும் பரல்கற்களோடு சேர்ந்து பொன்னும் நவமணிகளும் விளங்கும்படி அருள் செய்தார். அவைகளையும் பருக்கைக் கற்களுக்கு ஒப்பாகவே எண்ணி அவற்றையும் மற்ற கற்களோடு சேர்த்து தடாகத்தில் தூக்கிஎறிந்தார்.

அவரின் தூய துறவு நிலையை மேலும் விளங்கச் செய்யும்பொருட்டு இறைவன் அருளால் தேவ அரம்பையர்கள் அவர் முன் தோன்றி ஆடியும் பாடியும் காமம் வெளிபபடும்படி பல செயல்களைச் செய்வாராயினர். இறைவனடியே சிந்தித்து சிறிதும் மனமாறாது ''பொய்ம்மாயப் பெருங்கடலில்'' என்று தொடங்கும் திருத்தாண்டகம் பாடியருளினார். ஒரு விதத்திலும் வசப்படுத்த இயலாத அரம்பை மாதர் திரும்பிச் சென்றனர்.

ஒரு சித்திரை மாதத்துச் சதய மாத்திருநாளிலே சிவானந்த ஞானவடிவேயாகிச் சிவபெருமானுடைய சேவடியின் கீழ் மீளாது அமர்ந்தருளினார் திருநாவுக்கரசர்.

திருச்சிற்றம்பலம்

## விருத்தாசலம்

# ஸ்ரீ குமார தேவரின் தெய்வீக நிகழ்ச்சிகள்

தே. ஆ. ஸ்ரீநிவாஸன், திருப்பாதிரிப்புலியூர்.

### 1. ஜடாமுனிக்கருளியது

மல்லிகார்ச்சுன பருவதத்தில் வஞ்ச நெஞ்சம் பூண்டு வரம் வேண்டிய காரணமாகச் சிவபெருமானால் சாபமடைந்த தவசி ஜடாமுனியாகி விருத்தாசலத்தே மணிமுத்தாற்றோரத்திலே அரச மரத்திலே ஸ்ரீ குமாரதேவர் வருகையை எதிர் பார்த்த வண்ணமாக நெடுங்காலமிருந்துவந்தார். அச்சடாமுனி நம் முனிவர்அம்மரத்தினடியில்தங்கி யிருந்ததைத் தெரிந்து நாடிய பொருள் கைக் கெட்டினாற்போல உளம் மகிழ்வுற்று, அந்தணர் வடிவெடுத்து நம் சுவாமிகளை அடிபணிந்து நின்றது. அங்ஙனம் தம்மைப பணித்தேத்தி நின்ற சடாமுனியின் வாயால் அதன் வரலாறெல்லாம் கேட்டறிந்த பின் சிவபிரான் ஆணைப் படியே சாப விடுதலை செய்தருளினர். முனியும் முனிவராகி விடைபெற்றுப் போயிற்று.

### 2. குடும்பிக் கருளியது

நம் குமாரதேவர் கரபாத்திரம் செய்து கொண்டு அவ்வூரிலே வாழ்ந்து வருவதையும் அவரது மகிமையையும் அறிந்த ஒரு குடும்பியானவன், நியமமாகச் சுவாமிகளை நாடோறும் வழி பட்டு வரலானான். இதனால் அவனுக்குச் சகல சம்பத்துகளும் பெருகின. இதையுணர்ந்த அக் குடும்பி ஏதேனும் ஒரு திருப்பணியைத் தனக்குக் கட்டளையிடும்படி வேண்டினான். சுவாமிகள் ஸ்ரீ பெரியநாயகியார் சந்நிதானத்துக் கெதிரிலே ஒரு மண்டபம் கட்டி வைக்குமாறு பணித்தனர். அவனும் அங்ஙனமே அமைக்கையில் கல்லுத்திரம் மேலேறாமல் வருத்தந்தந்தது. உடனே அவன் இதைச் சுவாமிகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டான். சுவாமிகள் திருநீறவித்து அக்கல்லை மேலெழச் செய்தனர்.

### 3. மீனுக்குயிரளித்தல்

ஒரு நாள் ஸ்ரீ குமாரதேவர் கரபாத்திரத் திற்குச் சென்று ஒரு தெருவில் ஓர் இல்லறத்தான் வீட்டில் கையேந்தினர். அக்குடும்பி இவரது பெருமையறியாதவன். அவ்வீட்டினர் சமைத்து வைத்திருநத மச்சத்தை அன்னத்தோடு சலநது பரிமாறினா. அது தெரிந்த நம் சுவாமிகள் குளத் தருகே செல்லலும் மச்சம் உயிர் பெற்றுக் குளத் திற் குதிததுப் போய் விட்டது. இதனைக் கண்டவர் அச்சமும் வியப்பும் ஒருங்கே எய்தினர்

### 4. தொழுநோயாளிக்கருளியது.

தொழு நோயாளியொருவன் சுவாமிகளைத் தினமும் தரிசனம செய்து வந்தான் நோய் நாளுக்கு நாள் அதிகரித்தது. வேதனை மிகுநதது. சுவாமிகளைப் பணிந்து ஆலறி வேண்டினான. சுவாமிகளும் சிறிது திரு நீறெடுத்து அவன் இடக்கையில் வைத்து வலக்கையால் அதனை மூடிக்கொள்ளும்படி கூறி, அம்மூடிய கரங்களுடனே பழமலை நாதர் திரு முன்பு மாடத்திருக்கும் விக்கினேசுரரைக் காட்டி அங்கே சென்று கண்மூடி நின்று நடக்கும் அதிசயத் தைத் தெரிவிக்கக் கட்டளையிட்டார். அவனும் அவ்விதமே நின்றான். அப்போது அவ்விநாயகர் தமது துதிக்கையால் அவ்விபூதியைப் பரிசித்ததை அவன் உணர்ந்து வந்து சுவாமிகளிடம் தெரிவித் தான். உடனே சுவாமிகள் அத்திருநீற்றைத்தாமும் தரித்துக் கொள்ள அவனும் நோய் நீங்கி மகிழ் வடைந்தான்.

### 5 திருவாரூரில் தேரோடச் செய்தமை

ஒரு சமயம் ஸ்ரீ குமாரதேவர் திருவாரூர்ப் பெருவிழாக் காணச் சென்றனர். தியாகேசர் தேரூர்ந்து வரும்போது மாடவீதியிலே நம் சுவாமிகள் இரதத்துக்கு நேரே நின்று பெருமானை தரிசித்துக் கொண்டிருந்தனர். அப்போது பெரியார் பெருமையுணராத பேதையரிருவர் விகடமாக ''வீரசைவமருளைப் பார்த்தீரோ'' என்று பேசி இகழ்ந்தனர். இது கேட்ட நம் குமாரதேவர் மகா தேவரை நோக்கி சைவம் மருளானால் இரதம் நடக்கட்டும்; அருளானால் நிற்கட்டும்'' என்று கூறினர். தேர் நின்றுவிட்டது. சுவாமிகள் கொஞ்ச தூரத்திலுள்ளதொரு மர நிழலிலமர்ந்தனர்.

இரதம் நின்றுவிட்ட செய்தியைத் தஞ்சை மன்னனான தர்மகர்த்தனறிந்தான். அவன் இரதம் நிலைக்கு வந்த பின்பே உணவருந்தும் நியமமுடையவன் நடந்த விவரம் அறியாதவனாகி அம்மன்னன் அன்று மாலைவரையில் முயன்றான். பயன் படவில்லை. மனனன் மிகவும் மனம் நைந்தான். விரதம் தவறுகிறதேயென வேதனை அடைந்தான். இத்தருணத்தில் மேற்குறித்த செய்தி அவன் செவிக்கெட்டிற்று. உடனே மன்னன் அடியார் களுடனும் பரிவாரங்களுடனும் நம் சுவாமிகளிருப் பிடமடைந்து பிழை பொருத்தருளப் பெரிதும வேண்டினன். தயா சாகராகிய நம் குமாரதேவ

ரும் இரதத்தினிடம் போந்து'' பெருமானே, தயா நீதியே! வீரசைவம்அருளானால் இவ்விரதம் நடப்ப தாக! மருளானால் நிற்கட்டும்''. என்றன. இரத மும் யாவரும்அதிசயிக்க விரைந்து நிலை சேர்ந்தது.

## 6. மாந்திரீகனை மருட்டி மாகாளிக்கருளியது


ஸ்ரீகுமாரதேவர் திரும்பித் திருமுதுகுன்றப் வந்தடைநதனர். எப்போதும்போலவே அரசமரத் தினடியிலே எழுந்தருளியிருநதனர். இவ்விருத்தா சலத்திலே பத்திரகாளி கோட்டம் ஒன்றுண்டு. இந் தக் காளியைத் தன் கைவசப் படுத்திக் கொள்ளு மாறு பிற நாட்டு மந்திரவாதியொருவன் கருதி னான். இதையறிந்தனள் பத்திரகாளி. ஒரு ஸ்திரி வடிவத்தோடு ஸ்ரீ குமாரதேவரிடத்தே வந்து வணங்கி, இம்மாந்திரிகன் கருத்தையும் அவன் வரு கையையும் தெரிவுத்து அபயமளிக்க வேண்டினள். உடனே அக்காளி தேவியின் விருப்பபபடியே அவள் கோட்டமேவித் தமது திருவடியை அக்காளியின் உருவச்சிலையின் முடி மீது வைத்தெடுததனர். இதனால் மந்திரவாதியின் கண்களிரண்டும் குரு டாயின. உடனே அவன் திகிலடைந்து யாரேனும ஒரு மகான் இத்தலத்தில் இருக்கக் கூடுமென மதித் துக் கேட்டறிந்து ஸ்ரீகுமாரதேவா் இருக்கையை அடைந்து தனது பிழைபட்ட எண்ணத்தையும் விண்ணப்பித்துக் கண்ணைத் தருமாறு கனிந்து பரவினான். அது கண்ட நம் குருமூர்த்தி திருவுள மிறங்கி அம்மாந்திரிகனைச் சரீரமுள்ள அளவும் மாந்திரிகத் தொழிலை விட்டிருக்கப் பணித்து ஒரு கண் மாத்திரம் தெரியும்படிக் கடைக்கணித்தனர். அவனும் கிடைத்தது லாபமெனக்கொண்டு சுவாமி களை வழிபட்டுத் தன் நாடடைந்தனன்.

## 7. திருப்போரூர் சிதம்பர சுவாமிகளைச் சீடராக அடைதல்

ஒரு செல்வந்தருக்குப் புத்திரப் பேறில்லா வருத்தமிக்கது. அதனால் மனையாளொடும் அவர் நம் சுவாமிகளைத் தினம் பணிநது வந்தனர். அவர் காது விருப்பதனைத அறிந்த ஸ்ரீகுமாரதேவர் குமார ருண்டாக ஆசிர்வதித்து வீபூதி அளிததனுப்பினார். அப்பிரசாதமகிமையால அச்செல்வநதருக்கு இரு புததிரர்கள் தோன்றினர். இருவரும் ஐநதாண்ட டைநதபின் வித்தியாப்பியாசம் செய்விக்கப் பெற் றனர். பிறகு இலக்கண இலக்கியங்களில் நல்ல தேர்ச்சி உண்டாகும் நிமித்தம் அச்செல்வந்தர், மதுரைவாசியாகிய இலக்கணப்புலவர் சிதம்பரம் எனபவரை வரவழைத்துக் கல்வி கற்பிக்கும்படி செய்தனா. இரு பிள்ளைகளும் அவ்வித்துவானிடம் கல்வ் பயின்று வந்தனர்

இவ்வாறிருக்கையில் ஒருநாள் நம் குமார தேவர் அவ்வீட்டிற்கு வர நேர்ந்தார். சிதம்பரம் என்பார் நம்சுவாமிகளை மதித்தனரில்லை. அது கண்ட நம் சுவாமிகள் இவரை அடிமையாகக்க் கொள்ளக்கருதி ஒரு வாக்கியத்திற்கு அர்த்தம் கூறு மாறு கேட்டனர். புலவருக்கு நாவெழவில்லை. சுவாமிகளின் திருவடியில் வீழ்ந்து தம்மைரட்சிக்கு மாறு வேண்டினார். அதுமுதல் துறவு பூண்டு குமர குருவின் பின்னேயேசஞ்சரிக்கலாயினர்.

பிறகு ஸ்ரீகுமாரதேவர் சிதம்பரம் என்னும் சீடரோடும் திருப்போரூர் சேர்ந்து சாந்தலிங்க சுவாமிகளைத் தரிசித்துப் திருப்பணி இயற்றிக் கொண்டிருநதார். பின்பு ஒருநாள் தமது ஆசாரி யரிடம் சிதம்பரம் என்பவரையும் ஆட்கொள்ளும் படிக் கேட்டுக் கொண்டனர். அதறகு அவர் ''நமக் குள்ள சந்ததி போதும். நமது சந்ததிக்கு சந்ததி நெடுநாளாயில்லாதிருப்பதால் இவனை அழைத்



தேகிப்பக்குவ போதனை செய்துநீ அடிமையாக்கிக் கொள்ளுவாய்'' எனக் கட்டளை தநதருளினார்.

இதுவே மகாப்பிரசாதமென மதித்து ஸ்ரீ குமாரதேவரும் சிதம்பர சீடரோடும் விருத்தாச லம் எழுந்தருளி அவரது பக்குவம் சோதித்துப் போதித்துத் தொண்டராக்கிக் கொண்டனா. இச் சிதம்பர சுவாமிகளே பிறகு நம் குமார தேவருளிப் பாட்டின்படி யொழுகித் திருப்போரூர்ச் சந்நிதா னம் விளக்க நேர்ந்தனர். இவரே சாந்தலிங்க சுவாமிகளுடைய நூல்களுக்கு உரையும் வகுத்துத் திருப்போரூர்ச் சந்நிதி முறை என்ற நூலும் இயற் றியருளினர். தமதாசிரியராகிய ஸ்ரீ குமார தேவ ரைப் பரவி நெஞ்சு விடு தூது, பதிகம் முதலிய நூல்களையும் அருளிச் செய்துள்ளார்.

## 8. சாத்திரங்கள் அருளிச் செய்தது

ஸ்ரீகுமாரதேவர் விருத்தகாசி ஷேத்திரத்திலே ஞானநிட்டானுபூதிச் செல்வராய் வீற்றிருக்கையில் இவரைக் கொண்டு உலக மக்கள் உண்மையறிந்துய்யும் பொருட்டுச்சாஸ்திரங்கள் செய்விக்கவேண்டுமென்று ஸ்ரீ பெரியநாயகியம்மையார் திருவுள்ளங் கொண்டனர். அதனைக் குமாரதேவரிடம் அவரது யோகநிலையில் தெரிவித்தனர். சுவாமிகள் அடிமையால் சொல்லமுடியதென விண்ணப்பித்தலும் அம்மையார் ''நாமே உனது செந்நாவில் நின்று செப்புகின்றோம்'' என்று அருள் செய்தனள். அவ்வண்ணமே ஸ்ரீ குமாரதேவரும் பதினாறு திவ்விய சாத்திரங்களைச் சாற்றியருளினர். அந்நூல்களின் பெயர்கள் பின்உள்ளனவாகும்.

1. மகாராஜா துறவு
2. சுத்தசாதகம்
3. விஞ்ஞானசாரம்
4. அத்துவித உண்மை
5. பிரமானுபூதி விளக்கம
6. ஞானவம்மானை
7. தசாவத்தைக்கட்டளைச் சுருக்கம்.
8. தசகாரியக்கட்டளை
9. சகசநிட்டை
10. உபதேசசிந்தாந்தம்
11. பிரம சித்தியகவல்
12. சிவதரிசன அகவல்
13. ஆகமநெறியகவல
14. வேதநெறியகவல்
15. பிரமானுபவ அகவல்
16. சிவசமரசவாத அகவல் என்பன

## 9. பரிபூரணம்

ஸ்ரீகுமாரதேவ சுவாமிகள் இங்ஙனம் ஞானநிட்டாபரராய் பற்பல அருஞ்செயல்களை நிகழ்த்தி அளவற்ற அடியார்களுக்கு அநுக்கிரகம் புரிந்து, தமக்கும் பின்பு உண்மையுணர்ந்து மக்கள் ஒழுக வேண்டி வேதாகம சாரங்களாகப் பல சாத்திரங்களை இயற்றி உதவி விருத்தகிரியிலேயே வாழ்ந்து வந்தனர். இவரது அளவற்ற அடியார்களுள் இரண்டாவது அடிமையாக விளங்குமாறு பெற்றவர் ரெட்டி சிதம்பரசுவாமிகள் ஆவர். இவர் தமது ஞானசாரியார்விரைவிற் பரிபூரணமடைவெரனத் திருவருளாலுணர்ந்து ஸ்ரீ குமாரதேவரை நோக்கி ''அருட்குருவே! அடியார்கள, தேவரீர் பரிபூரணமடைந்தபின் தரிசனம் செய்து உய்யும் பொருட்டு ஏதேனும் ஒரு திருப்பணியை அடியேனுக்குக் கட்டளையிட்டருள வேண்டு'' மென வேண்டினர். அதுகேட்ட நம் சுவாமிகள் ''நாம் மறைந்த பின்னரும்நம் பெயரிருக்க வேண்டுமா'' எனக் கூறிவிட்டு அகண்ட பரிபூரண சாஷாத்கார சொரூப வியாபகத்திற் கலந்தருளினார். இங்ஙனம் இவர் கலந்தருளிய நன்னாள் புரட்டாசிஸ்ரீபூர்வ பட்சம்சதுர்த்தசி ஆகும். பின்பு ரெட்டி சிதம்பர சுவாமிகள் ஸ்ரீ பெரியநாயகியம்மையார் ஆக்ஞையின்படிஸ்ரீகுமாரதேவர் திருப்பெயரால் மடாலயமும் நியமித்து வாழ்ந்து வந்தனர். ஸ்ரீ குமாரதேவர் எழுந்தருளியிருந்த காலம் இப்பொழுதைக்குச் சற்றேறக்குறைய முந்நூறு ஆண்டுகட்கு முந்தியதாகும் எனத் தெரியவருகின்றது. வீரசைவ சமயாசாரிய திலகராகிய நம் ஸ்ரீ குமாரதேவர் திருவடிகள் எஞ்ஞான்றும் வாழக்கடவன! இவரது ஞான பரம்பரை என்றும் சிறப்புற்று விளங்குமாறு ஸ்ரீ பெரியநாயகியாரைச் சிந்தித்து வணங்குகின்றோம்.

அருள்சார்ந்த லிங்கமுனிக் கன்பா போற்றி
அத்துவித சித்தாந்த மருள்வோய் போற்றி
மருள்சார்ந்த மனந்தெருட்டு மகிபா போற்றி
மங்கை நாயகியருள்கொள் மகனே போற்றி
தெருள்சார்ந்த யோகநிலைச் செல்வா போற்றி
தேனேநற் கோனேயெம் மானே போற்றி
பொருள்சார்நத பழமலையெம் புனிதா போற்றி
பொற்குமர தேவ பதம் போற்றி போற்றி.

# குருவிடம் நம்பிக்கை வேண்டும்!

## இராமகிருஷ்ணபரமஹம்சர்

ஒரு பால்காரி ஆற்றுக்கு அக்கரையிலே வசித்து வந்த பிராம்மண குரு ஒருவருக்குத் தினந்தோறும் பால் கொண்டுபோய்க் கொடுப்பது வழக்கம்.

ஒரு சமயம் படகுப் போக்குவரத்து சரியாக நடைபெறவில்லை. ஆதலால் நாள்தோறும் சரியான நேரத்திற்குப் பால் கொண்டுபோய்க் கொடுப்பதில் தடை ஏற்பட்டது. ஒரு நாள் அந்தப் பிராம்மண குரு, ''வேளைக்கு ஒழுங்காக ஏன் பால் கொண்டு வந்து தருவதில்லை?'' என்று பால்காரியைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டார்.

எளிய பால்காரி அவருக்கு, ''சுவாமி, நான் என்ன செய்வேன்? தினமும் அதிகாலையில்தான் நான் வீட்டைவிட்டுக் கிளம்புகிறேன். ஆனால் நதிக்கரைக்கு வந்ததும் நீண்ட நேரம் ஓடக்காரனுக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது'' என்று பதில் சொன்னாள்.

அதைக் கேட்டதும் பிராம்மண குரு, ''ஏ பெண்ணே! பகவானுடைய நாமத்தை உச்சரிப்பதால் மக்கள் பிறவியாகிய பெரிய கடலையே தாண்டிக் கடந்து விடுகிறார்கள். உன்னால் இந்த சிறிய ஆற்றைக் கடக்க முடியவில்லையா?'' என்று வினவினார்.

கள்ளங்கபடமில்லாத அந்தப் பால்காரி, பிராம்மணர் சொன்னதை அப்படியே நம்பினாள். ஆற்றைக் கடப்பதற்குச் சுலபமான வழி தெரிந்து விட்டது என்று பெரிதும் மகிழ்ந்தாள். வஞ்சம் இல்லாத நெஞ்சம் அவளுடையது.

அடுத்த நாள் முதற்கொண்டு குருவுக்கு அதிகாலையிலேயே உரிய நேரத்தில் பால் கிடைத்து வந்தது. ஒரு நாள் அவர் பால்காரியிடம், ''நீ முன்பு போல இப்போதெல்லாம் தாமதமாக வருவதில்லை! எப்படி உன்னால் உரிய காலத்தில் பால் கொண்டுவர முடிகிறது?'' என்று கேட்டார்.

''சுவாமி தேவரீர் சொன்னபடியே பகவானின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே ஆற்றைக்கடந்து வருகிறேன். இப்போதெல்லாம் நான் ஓடக்காரனுக்காகக் காத்திருப்பதில்லை'' என்று பால்காரி பதில் சொன்னாள். பிராம்மணர் இதை எப்படி நம்புவார்? பால்காரியின் வார்த்தையில் நம்பிக்கையில்லாத அவர், ''நீ எப்படி ஆற்றைத் தாண்டி வருகிறாய் என்பதை எனக்குக் காட்டுவாயா?'' எனறு கேட்டார்.

பால்காரி சூதுவாது தெரியாதவள். அவள் சம்மதித்துப் பிராமணரை அழைத்துக் கொண்டு நதிக்கரைக்குப் போனாள். பகவானின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே ஆற்று நீரின் மேல் சர்வ சாதாரணமாக நடந்து போக ஆரம்பித்தாள். அப்படிச் சிறிது தூரம் சென்றதும் பின்னால் திரும்பிப் பார்த்தபோது குரு நடக்க முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவரது நிலையைக் கண்டதும் அவள், ''சுவாமி! இது என்ன? பகவானின் நாமத்தை வாயால் சொல்கிறீர்கள். அதே சமயம் துணி எங்கே நனைந்துவிடப் போகிறதோ என்று கைகளால் தூக்கிப் பிடித்துக் கொள்கிறீர்கள். தங்களுக்குப் பகவானிடத்தில் பரிபூரண நம்பிக்கை இல்லையே' என்று கேட்டாள்.

செய்து அவரை மனங்குளிர வைக்கும் மங்கை நல்லாரையும் கண்டிருக்கிறோம். மக்களிடம் பேதம் காணும் மாதா பிதாக்களை எனனென்று கூறுவது. பருவதராசனிடம் சக்திதேவி மகளாகப் பிறந்தது பற்றி மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ''தாயே உலகில் ஆண் மகவு பிறப்பது தான் சிறப்பு. பெண் ஒரு சிறப்பல்ல, பெண் பிறந்தால் துன்பம் வந்த மாதிரி என்றும், எவராவது திருமணம் செய்து கொண்டு வணங்கினால் அந்த மணமகளுக்கு நல்ல ஆண் குழந்தை பிறக்க வேண்டுமென்று ஆசிகூறும் சிலருக்கு மனம் வெட்கும்படியாக பருவதராசனுக்கு மகளாக பிறந்தாயே'' எனத் தன்னுடைய நூல் ஒன்றில் பாடுகிறார்கள்.

''பேசுபுகழ் சால்பெரும்புவனத்தில் ஆண்மகப்
பெறல் சிறப்பு என்றும்
மற்றைப் பெண்மகப் பெறல் அத்துணை சிறப்பன்று
துயர்பெற்றதொப்பா குமென்றும்
மாசுபடு !துன்பமே பெண்ணுருவாய் எந்த வைப்பி
னும் வருவதென்றும்
மதிக்கின் ஒருமகவு மகவா என்று இங்ஙனம்
வகுத்துரைப்பார்களொடு
கூசுதலிலாது அகமலர்ந்து ஆண்மகப்பெறுதிகுறைவு
தபவென்று ஆசி
முற்கூறுநரும் உள்ளம் நாண்கொள்ள வெள்ளப்
படாக் குவடுவான்என் ஓங்கும்
தேசுமதி பனிமலைக்கொரு புதல்வியாய உமை
செங்கீரையாடியருளே
[illegible]ப்பெருமணத்தமர் அருட்பெருமணச் செல்வி
...லே''

---

## பாவம் தீர்ந்திட !

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமசி வாயவே

—திருநாவுக்கரசர்.

---

பொம்மைகளுக்குப் பால் கொடுப்பதாக விளையாடினாள்.

உலகத்தில் மிக உயர்ந்த இன்பம் குழந்தைகளை வளர்ப்பதனால் ஏற்படும் இன்பம். வீரபாண்டியப் புலவர் என்னும் பெரியார் தூத்துக்குடியிலிருக்கும் பாகம் பிரியாள் என்ற அம்மையின்மீது பிள்ளைத்தமிழ் பாடுங் காலத்தில் ஐம்புலன்களுக்கும் இன்பமளிக்கும் தாயல்லவா நீ என்று தாலாட்டுப் பாடுகிறார். ''அம்மா! உன் மழலைச் சொல்லைக் கேட்பது காதிற்கு இன்பம். உன்னை முத்தமிடுவது வாய்க்கு இன்பம். உன்னைத் தீண்டிமடிமேல் வைத்திருப்பது உடலுக்கு இன்பம். உன்னை உச்சிமோவது மூக்கிற்கு இன்பம். உன்னைக் காண்பது கண்ணிற்கு இன்பம்'' என்று குறிப்பிடுகிறார்.

''காதுக்கினிதுன் மழலை அஞ்சொல்
கண்ணுக்கினிதுங் காட்சி இன்பம்

## தடாதகைப் பிராட்டி திரு அவதாரம்

மூர்த்தி, தீர்த்தம், தலம் ஆகிய மூன்று பெருமைகளையும் உடைய மதுரையை நிர்மாணம் செய்த குலசேகர பாண்டியன் மகனான மலயத்துவஜன்என்ற பாண்டியனுக்கு மனைவியர் அநேகர் உண்டு. சூரிய குலத்தரசனான சூரசேனன் மகளான காஞ்சனமாலை என்பவள் பாண்டியனின் பட்ட மகிசியாக விளங்கினாள். முப்பொழுதும் சிவபூஜை செய்யும் அப்பாண்டியனுக்கு மக்களில்லாத குறையிருந்தது. மகவில்லையே என மனம் வருந்திய அரசன் அசுவமேத யாகம் செய்யலானாள். அசுவமேத யாகம் பாவங்களைப் போக்கக் கூடியது. நூறு அசுவமேத யாகங்களை ஒருவன் செய்தானென்றால் தேவேந்திர பதவிகிட்டும். மலையத்துவஜ பாண்டியன் ஒன்றன் பினனொன்றாக 99 அசுவமேத யாகங்களை செய்துவிட்டதையறிந்து தேவேந்திரன் அவனெதிரில் தோன்றி ''புத்திரப்பேறு விரும்பும் நீ புத்திரகாமேட்டி யாகம் புரிந்தால் உனது எண்ணம் நிறைவேறும். ஆதலால் யாகத்தை நிறுத்திவிடு'' எனக் கூற அவ்வாறே பாண்டியன் அசுவமேத யாகத்தை நிறுத்தி புத்திரகாமேட்டி யாகத்திற்கு தனது நியமத்திற்குரிய மனைவியுடன் யாகசாலையை அடைகிறான்.

''மிக்கமக வேள்விசெய் விருப்புடைய னாகி
அக்கணம் அதற்குரிய யாவையும் அமைத்துத்
தக்கநிய மத்துரியதேவியொடு சாலை
புக்கனன் இருந்துமக வேள்விபுரிகிற்பான்''.

ஒருவனுக்கு எத்தனை மனைவியர் இருப்பினும் நற்காரியங்களுக்குக் கூட இருந்து உதவி செய்ய முதல் மனைவிக்கே உரிமையுண்டு. அவளையே, 'தருமபத்தினி' என ஆன்றோர் கூறுவர். எந்த நல்ல காரியத்தை யாரம்பித்த போதிலும் இந்த என் தரும பத்தினியுடன் இக்காரியத்தைச் ''செய்வேனாக'' என மந்திரம் கூறுவர்.

யாகம் நடைபெறுகிறது. இதன் காரணமாக உலகத்தில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. கைலாயபதியான பரமேசுவரன் பக்கத்திலிருந்த பார்வதியைக் காணோம். பார்வதி தேவியை வளர்த்த அன்னையான மேனாதேவி ''நமக்குக் கிடைத்த பாக்கியம் வேறு எவருக்கோ கிடைக்கப் போகிறதே'' என நாணமடைகிறாள். மலயத்துவஜ பாண்டியன் வலதுதோளும் காஞ்சனாதேவியின் இடது தோளும் துடிக்கின்றன. ஏழுலகங்களும் களிப்படைகின்றன. சைவம் தழைக்கவும், தருமம் வாழ அதருமம் அழியப் போகின்றன எனவும் சுபசகுனங்கள் தோன்றுகின்றன. பதினெட்டு மொழிகள் பேசும் உலகத்தில் தமிழ் பேசும் எல்லை சிறப்படையவும், அந்தத் தமிழ்த் தேசத்தின் அரசர்களில் பாண்டியர் வம்சம் பெருமையடையவும் வேள்வித் தீயிலிருந்து தோன்றுகின்றது ஒரு திருவுருவம்; புன்னகை புரிந்து கொண்டு மழலை பேசிக் கொண்டு கழுத்தில் அழகிய ஒரு முத்துமாலையுடன் தோன்றுகிறாள் உலகநாயகி. மூன்று வயதுக் குழந்தையாகத் தோன்றிய அம்மை இயற்கைக்கு விரோதமாக மூன்று மார்புகளுடன் தோன்றுகிறாள்.

''தெள்ளமுத மென்மழலை சிந்த இள மூரல்
முள்ளெயிறுஅரும்பமுலை மூன்றுடையதோர்பெண்
பிள்ளையென மூவொரு பிராயமொடு நின்றாள்
எள்ளரியபல்லுயிரும் எவ்வுலகும் ஈன்றாள்.''

உலகத்தில் நாம் பிறக்கிறோம். பிறக்கும்போது அன்னைக்கு அளவிட முடியாத துன்பம். பிறக்கும் நமக்கும் பிறக்கும்போதே துன்பம். அதனால் மறுபடியும் அன்னை வயிற்றில் பிறவாமற் காக்க வேண்டும் எனப் பெரியோர்கள் இறைவனை வேண்டுவதுண்டு.

''மாதா உடல் சலித்தாள் வல்வினையேன்
கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்து விட்டானே - நாதா
இருப்பையூர் வாழ்சிவனே இன்னுமோர் அன்னை
கருப்பையூர் வாராமற் கா ''

## 8. சாத்திரங்கள் அருளிச் செய்தது

ஸ்ரீகுமாரதேவர் விருத்தகாசி ஷேத்திரத்திலே ஞானநிட்டானுபூதிச் செல்வராய் வீற்றிருக்கையில் இவரைக் கொண்டு உலக மக்கள் உண்மையறிந்துய்யும் பொருட்டுச்சாஸ்திரங்கள் செய்விக்கவேண்டுமென்று ஸ்ரீ பெரியநாயகியம்மையார் திருவுள்ளங் கொண்டனர். அதனைக் குமாரதேவரிடம் அவரது யோகநிலையில் தெரிவித்தனர். சுவாமிகள் அடிமையால் சொல்லமுடியதென விண்ணப்பித்தலும் அம்மையார் ''நாமே உனது செந்நாவில் நின்று செப்புகின்றோம்'' என்று அருள் செய்தனள். அவ்வண்ணமே ஸ்ரீ குமாரதேவருப் பதினாறு திவ்விய சாத்திரங்களைச் சாற்றியருளினர். அந்நூல்களின் பெயர்கள் பின்உள்ளனவாகும்.

1. மகாராஜா துறவு
2. சுத்தசாதகம்
3. விஞ்ஞானசாரம்
4. அத்துவித உண்மை
5. பிரமானுபூதி விளக்கம
6. ஞானவம்மானை
7. தசாவத்தைக்கட்டளைச் சுருக்கம்.
8. தசகாரியக்கட்டளை
9. சகசநிட்டை
10. உபதேசசிந்தாந்தம்
11. பிரம சித்தியகவல்
12. சிவதரிசன அகவல்
13. ஆகமநெறியகவல
14. வேதநெறியகவல்
15. பிரமானுபவ அகவல்
16. சிவசமரசவாத அகவல் என்பன

## 9. பரிபூரணம்

ஸ்ரீகுமாரதேவ சுவாமிகள் இங்ஙனம் ஞான

# குருவிடம் நம்பிக்கை வேண்டும்!

### இராமகிருஷ்ணபரமஹம்சர்

ஒரு பால்காரி ஆற்றுக்கு அக்கரையிலே வசித்து வந்த பிராம்மண குரு ஒருவருக்குத் தினந்தோறும் பால் கொண்டுபோய்க் கொடுப்பது வழக்கம்.

ஒரு சமயம் படகுப் போக்குவரத்து சரியாக நடைபெறவில்லை. ஆதலால் நாள்தோறும் சரியான நேரத்திற்குப் பால் கொண்டுபோய்க் கொடுப்பதில் தடை ஏற்பட்டது. ஒரு நாள் அந்தப் பிராம்மண குரு, ''வேளைக்கு ஒழுங்காக ஏன் பால் கொண்டு வந்து தருவதில்லை?'' என்று பால்காரியைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டார்.

எளிய பால்காரி அவருக்கு, ''சுவாமி, நான் என்ன செய்வேன்? தினமும் அதிகாலையில்தான் நான் வீட்டைவிட்டுக் கிளம்புகிறேன். ஆனால் நதிக்கரைக்கு வந்ததும் நீண்ட நேரம் ஓடக்காரனுக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது'' என்று பதில் சொன்னாள்.

அதைக் கேட்டதும் பிராம்மண குரு, ''ஏ பெண்ணே! பகவானுடைய நாமத்தை உச்சரிப்பதால் மக்கள் பிறவியாகிய பெரிய கடலையே தாண்டிக் கடந்து விடுகிறார்கள். உன்னால் இந்த சிறிய ஆற்றைக் கடக்க முடியவில்லையா?'' என்று வினவினார்.

உலகமாதா வேள்வித் தீயின்ன்று தோன்றுகிறாள். அன்னையான காஞ்சன மாலைக்கு எவ்விதமான துன்பமில்லை. தாய்க்கு வருத்தமேற்படாமல் தோன்றுகிறாள் உலக மாதா, சிவபரமாகவோ, விட்டுணு பரமாகவோ, எந்ததேவியும் அவதரித்தாள் எனக் கூறும்போது, அன்னையின் திருவயிற்றிலிருந்து பிறந்தாள் என்பதே கிடையாது. சீதா பிராட்டி யாகசாலையைப் பொற்கலப்பைகொண்டு உழும்போது நுகத்தடியின் முனையில் தோன்றினாள். அம்மை பார்வதி தேவி ஒரு அழகிய ஓடையின் கரையில் கிடக்கப் பர்வதராஜன் கண்டெடுத்தான். தேனையும் தமிழையும் குழைத்துப் பாடல்களைப் பாடிய ஆண்டாள் ஒரு துளசி வனத்தில் பெரியாழ்வாரால் கண்டெடுக்கப்பட்டாள். உலகத்தைப் பெற்றெடுக்கும் உலக மாதாவை எந்த வயிறும் தாங்காது (என்பது குறிப்பு

பராசக்தி, 'ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி இப்பேர்ப்பட்ட ஐந்து சக்திகளாக உலகத்தைப் படைத்து காத்து, அழித்து, மறைத்து, அனுக்கிரகிக்கிறாள் அம்மை. இப்பேர்ப்பட்ட அம்மையை மகளாக அடைவதற்குப் பாண்டிய மகாராசன் என்ன புண்ணியம் செய்தானோ!

''பரைஆதி விருப்பறிவு தொழிலாகி உலகமெலாம்
படைத்துக் காத்து
வரையாது துடைத்து மறைத்து அருளி அவை
நின்றுந்தன் வடிவு வேறாய்
உரையாதி மறைகடந்த ஒரு முதல்வி திருமகளாய்
உதித்தற்கு இந்தத்
தரையாளும் மன்னவன் செய் தவமிதுவோ
அதற்குரிய தவந்தான் மன்னோ!''

உலகில் எது நடந்தாலும் அம்மையின் செயல் என்கிறார் நீலகண்ட தீட்சிதரவர்கள். உலகத்தில் எது செய்தாலும், தவறிழைப்பது கூட யாவும் உன் செயலாக இருக்க, குற்றம் செய்தேன் எனஎன்னை எவ்வாறு கூறுவது? அதற்கும் தாயே! நீ கொடுத்த

சக்திதானே! நன்றாகச் சாப்பிடு என்று உணவூட்டிய தாய் குழந்தையைப் பார்த்து ''ஏன் நிறையச் சாப்பிட்டாய்'' என்று கண்டித்த மாதிரியல்லவா இருக்கிறது இக்காரியம் எனக் கேட்கிறார்.

''காண்பதும் உயிர்ப்பதுவும் எதுவும் உந்தன்
செயலாக கருதா நின்றேன்
பூண்பதினி எத்தவத்தை என்னுடையது
எனத்தாயே! புசிப்பாயென்ன
ஊண்பறிந்து உண்பாயென்ன தாய் கொடுத்த
துண்ட குழந்தை மீதூண் குற்றம்
காண்பவர் யார் கடம்பவனப் பவனமமர் கயற்
கண்ணாளே''

கள்ளமில்லாத வெள்ளையுள்ளம் படைத்தவர்களிடம் ஆனந்த வெள்ளமாக விளங்கும், அன்பே உருவான அம்மையே தனக்கு ஒரு மகளாக வந்துள்ள கருணையையும், தன் மனைவியான காஞ்சனமாலையின் நன்வினைப் பயன் இது என்பதையுமறியாத பாண்டியன் கவலைப்படுகிறான்.

இன்றும் உலகில் பெண் குழந்தை பிறந்துவிட்டால் சிலர் அனாவசியமாகக் கவலைப்படுகின்றனர். பெண்சக்தியின் உருவம், உலகில் எதைக் கண்டாலும் பெரியோர்கள் பெண் உருவமென்று வணங்குவார்கள். தண்ணீரை கங்கை, பூமியை பூமாதேவி, ஆகாயத்தை ஆகாயவாணி, பொருளை இலட்சுமிதேவி, கல்வியைச் சரசுவதி என்றெல்லாம் வணங்குவர். ஆனால் பெண் பிறந்தால் கவலையும் வெறுப்பும் கோபமும் அடையும் அன்பர்களின் அறியாமைதான் என்னே! ஆண்மகன் பிறந்தால் களிப்படைகின்றனர். பெண் பிறந்தால் செலவு எனப் பயப்படுகின்றனர். ஆனால் ஆணைக் காட்டிலும் பெண்ணுக்கு நன்றியறிவு அதிகம் என்பதையும் மறந்துவிடுகின்றனர். மனைவி வந்தவுடன் மாதா பிதாக்களை மறக்கும் மாபுருடர்களை எம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். மணாளன் வந்தபோது தன் மாதா பிதாக்களுக்கு தனனால் இயன்ற உதவி

செய்து அவரை மனங்குளிர வைக்கும் மங்கை நல்லாரையும் கண்டிருக்கிறோம். மக்களிடம் பேதம் காணும் மாதா பிதாக்களை எனனென்று கூறுவது. பருவதராசனிடம் சக்திதேவி மகளாகப் பிறந்தது பற்றி மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ''தாயே உலகில் ஆண் மகவு பிறப்பது தான் சிறப்பு. பெண் ஒரு சிறப்பல்ல, பெண் பிறந்தால் துன்பம் வந்த மாதிரி என்றும், எவராவது திருமணம் செய்து கொண்டு வணங்கினால் அந்த மணமகளுக்கு நல்ல ஆண் குழந்தை பிறக்க வேண்டுமென்று ஆசிகூறும் சிலருக்கு மனம் வெட்கும்படியாக பருவதராசனுக்கு மகளாக பிறந்தாயே'' எனத் தன்னுடைய நூல் ஒன்றில் பாடுகிறார்கள்.

''பேசுபுகழ் சால்பெரும்புவனத்தில் ஆண்மகப்
பெறல் சிறப்பு என்றும்
மற்றைப் பெண்மகப் பெறல் அத்துணை சிறப்பன்று
துயர்பெற்றதொப்பாகுமென்றும்
மாசுபடு !துன்பமே பெண்ணுருவாய் எந்த வைப்பி
னும் வருவதென்றும்
மதிக்கின் ஒருமகவு மகவா என்று இங்ஙனம்
வகுத்துரைப்பார்களொடு
கூசுதலிலாது அகமலர்ந்து ஆண்மகப்பெறுதிகுறைவு
தபவென்று ஆசி
முற்கூறுநரும் உள்ளம் நாண்கொள்ள வெள்ளப்
படாக் குவடுவான்என் ஓங்கும்
தேசுமதி பனிமலைக்கொரு புதல்வியாய உமை
செங்கீரையாடியருளே
திருப்பெருமணத்தமர் அருட்பெருமணச் செல்வி
செங்கீரையாடியருளே''

—திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ்

''மக்களில்லையே என மனம் வருந்தித் தவம் செய்தேன். ஒரு ஆண் குழந்தை கிடைக்குமென இந்த வேள்வி செய்தேன். அதுவும் பெண் மகவை யளித்துள்ளது. ஐயோ! அப்படிப் பிறந்த குழந்தையும் இயற்கைக்கு விரோதமாக மூன்று மார்புகளுடன் தோன்றி உற்றோரும் உலகோரும் பரிகசிக்குபடி நேர்ந்திருக்கின்றதே'' என்று கவலையடைந்திருக்கும் காலத்தில் ''மன்னவ! உன திருமகளுக்கு ஆண்மகன் மாதிரி வேண்டிய சடங்குகளைச் செய்து இந்நாட்டு அரசியாக முடிச்சூட்டு. அவள் கணவன் வரும்போது அவளுக்கு அதிகமான உறுப்பு மறையும். கவலைப்படாதே'' என்று இறைவனருளால் ஒரு வாக்கு அசரீரியாகக் கூறுகிறது.

''மன்னவ! நின் திருமகட்கு மைந்தர்போற் சடங்
கனைத்தும் வழாது வேதம்
சொன்னமுறை செய்துபெயர் தடாதகையென்று
இட்டுமுடி சூட்டுவாய்; இப்
பொன்னனையாள் தனக்கிறைவன் வரும்பொழு
தோர் முலைமறையும் புந்தி மாழ்கேல்
என்ன அரன் அருளால் ஓர் திருவாக்கு விசும்புடை
நின்று எழுந்ததன்றே''.

இதுகேட்ட மன்னவன் மகிழ்ச்சியடைந்து ''சிறையிலிருக்கும் கைதிகளை விடுதலை செய்யுங்கள். ஏழுவருஷம் வரி கிடையாதென்று அறிவியுங்கள். கோயில்களுக்கும் சத்திரங்களுக்கும் மேலும் வேண்டியவற்றைச் செய்யுங்கள். சிற்றரசர்களை எல்லாம் விடுதலை செய்யுங்கள். ஊரெங்கும் விழாக் கொண்டாடச் சொல்லுங்கள்'' என்றெல்லாம் கட்டளையிடுகிறான்.

அம்மை பராசக்தி அருமையாக வளருகிறாள். குழந்தை விளையாடுகிறாள். கருணாமூர்த்தியான முருகன்கூட வாய்வைத்து அருந்தாத மார்பில்

## பாவம் தீர்ந்திட!

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமசி வாயவே

—திருநாவுக்கரசர்.

பொம்மைகளுக்குப் பால் கொடுப்பதாக விளையாடினாள்.

உலகத்தில் மிக உயர்ந்த இன்பம் குழந்தைகளை வளர்ப்பதனால் ஏற்படும் இன்பம். வீரபாண்டியப் புலவர் என்னும் பெரியார் தூத்துக்குடியிலிருக்கும் பாகம் பிரியாள் என்ற அம்மையின்மீது பிள்ளைத்தமிழ் பாடுங் காலத்தில் ஐம்புலன்களுக்கும் இன்பமளிக்கும் தாயல்லவா நீ என்று தாலாட்டுப் பாடுகிறார். ''அம்மா! உன் மழலைச் சொல்லைக் கேட்பது காதிற்கு இன்பம். உன்னை முத்தமிடுவது வாய்க்கு இன்பம். உன்னைத் தீண்டிமடிமேல் வைத்திருப்பது உடலுக்கு இன்பம். உன்னை உச்சிமோவது மூக்கிற்கு இன்பம். உன்னைக் காண்பது கண்ணிற்கு இன்பம்'' என்று குறிப்பிடுகிறார்.

''காதுக்கினிதுன் மழலை அஞ்சொல்
கண்ணுக்கினிதுங் காட்சி இன்பம்
கனிவாய்க் கினிதாய்க் கவுண் நெரித்து
கன்னந் தனைமுத்துவ தின்பம்
வேதச் சொரூபி உனனைமடி
மேல் வைத்திருப்ப துடற்கு இன்பம்
மெச்சியுனது உச்சியை மோந்து
வியத்தல் நாசிக்கு இனிதின்பம்
பேதைக்கினி ஐம்பொறிக் கின்பம்
பிள்ளைக் கனியன்றி யுமுண்டோ?
பெரிய இமையக் கிரியருள் பெண்
பிள்ளாய்! குதலை விள்ளாயோ?
சீதக்காயாம் பூவருணச் செல்வி? தாலோ!
தாலேலோ!
சிவனார்பாகம் பிரியாத செல்வீ தாலோ!
தாலேலோ!''

இவ்வாறெல்லாம் தாலாட்டப் பெறுகிறாள் அம்மை. உத்தம மீனாட்சி உபாசகராகிய குமரகுருபர சுவாமிகள்

''உருகி உருகி நெக்கு நெக்குள்
உடைந்து கசிந்திட்டு அசும்பூறும்
உழுவல் அன்பிற் பழவடியார்
உள்ளத் தடத்தில் ஊற்றெடுத்துப்
பெருகு பரமானந்த வெள்ளப்
பெருக்கே! சிறியேம் பெற்ற பெரும்
பேறே! ஊறுநறைக் கூந்தல்
பிடியே! கொடிநுண் நுசுப்பு ஒசிய
வருங்குங்குமக் குன்றிரண்டேந்தும்
மலர்ப்பூங்கொம்பே! தீங்குழலின்
மதுரங் கசிந்த பசுங்குதலை
மழலையரும்பச் சேதாம்பல்
முருகு விரியும் செங்கனிவாய்
முத்தந்தருக முத்தமே!
முக்கட் சுடர்க்கிடு விருந்திடுமும்
முலையாய் முத்தந் தருகவே!

என்று முத்தப் பருவம் பாடி அம்மையின் கருணையை வியந்து உருகுகிறார். அம்மை அம்புலியை அழைத்து விளையாடுகிறாள்.

''குழகுபடு நின்மேனி நாடொறும் தேய்வுறும்
குறையையும் சிந்திக்கிலாள்!
கொண்ட மனையாட்டியரைஒப்ப நோக்காத் தீக்
குணத்தையும் மனத்தில் எண்ணாள்!
மழகளிற்று ஆனனத்தன் சேயை ஒரு ஞான்று
மதியின்றி எளளி அந்தோ?
மன்பதைகள் காணுதற்கு ஒண்ணாப்புலைத்தன்மை
வாய்த்த நின்புனலை உன்னாள்!
பழகி அரன்முடியில் தன மாற்றவளினொடு தவழ்
பான்மையைச் சிறிதும் நினையாள்
பண்டுநீ பெருநோன்பு உஞற்றியுளை போலும்
பரிந்துனை விரைந்தழைத்தாள்!
அழகுநிறை வைரவன் கோயில்வளர் அம்மையுடன்
அம்புலி! ஆடவாவே!
அடியரிடர் பொடிசெயடல் வடிவுடைய
பிடியுடன்
அம்புலி! ஆடவாவே!''

இவ்வாறு அருமையாக வளர்ந்த அம்மை மீனாட்சிக்கு முடிசூட்டி வைத்து வானாடு பெற்றான் மலையத்துவஜ பாண்டியன்.

காலையில் எழுந்து நீராடிச் சிவபூசை முடித்து சிவாலயம் சென்று வழிபாடு செய்து பின்னர் சபைக்கு வருகிறாள் மீனாட்சியம்மை. அநேக தேசத்து அரசர்களுக்கு பேட்டியளிக்கிறாள். வேதியர்கள் ஒழுக்கம் குன்றாது நடக்கின்றனரா, கோயில்களில் பூசைகள் செவ்வையாக நடக்கின்றனவா எனக்கண்டும், தன் குடி மக்களின் நலன்களை நேரிலும் ஒற்றர்கள்மூலம் அறிந்தும் ஆவனச் செய்கிறாள். கற்றறிந்த புலவர்களின் கவிதைகளைக் கேட்டு மகிழ்கிறாள். கல்வி, செல்வம் இரண்டையும் கண்களாகப் போற்றுகிறாள். இவ்வாறு அம்மை கன்னிப் பருவத்தில் பாண்டிய தேசத்தை அரசாண்டதால் அது கன்னிநாடு எனப் பெயர் பெற்றது.

''வரைசெய் பூண்முலைத் தடாதகை மடவரல்
பிராட்டி
விரைசெய் தார்முடி வேய்ந்து தண்குடை மனு
வேந்தன்
கரைசெய் நூல்வழி கோல்செலக் கன்னியாம்
பருவத்து
அரைசு செய்தலாற் கன்னி நாடாய தந்நாடு .

இந்த வரலாற்றை அகஸ்தியர் முனிவர்களுக்குக் கூற ''பாண்டியன் மகளாகப் பராசக்தி வருவதற்குக் காரணம் என்ன? என அவர்கள் கேட்க அகத்தியர் பதில் கூறுகிறார். விச்சுவாசு என்று ஒரு கந்தர்வன் இருந்தான். அவனுக்கு இச்சாவதி என ஒரு மகள் பிறந்தாள். ஒருநாள் அச்சிறுமி, தன் தந்தையை வணங்கி ''அம்பிகையை வழிபட்டு அருள் பெற விருமபுகிறேன் ' எனக் கூற, அவன் தன் மகளுக்கு அம்பிகையின் மந்திரத்தை உபதேசிக்க அவள் மதுரைக்குச் சென்றாள். தினமும் பொற்றாமரையில் குளித்து, அம்மையை தியானித்திருக்க ஒரு நாள் அம்மை மூன்று வயதுப் பெண் குழந்தையாக வந்து, ''தாயே! உனக்கு என்ன வேண்டும்?'' எனக் கேட்க இச்சாவதி, ''உன் திருவடியில் என்றும் நீங்காத அன்பு வேண்டும்'' எனக் கூற, ''உனக்கு இன்னும் என்ன வேண்டும்?'' என அம்மை கேட்க ''இக்குழந்தை உருவத்தில் என்னிடம் வந்து இருந்து அருள் பாலிக்க வேண்டும'' என இச்சாவதி கேட்டாள். அவ்வார்த்தைக்கு இணங்கிய அம்மை ''மதுரையம்பதியை மலையத்துவஜன் என்ற பாண்டிய மன்னவன் ஆளப்போகிறான். அவனது மனைவியாக நீ வா. அப்போது உனது ஆசை நிறைவேறும்'' எனக் கூறினாள்.


''இச்சாவதி காஞ்சனமாலையாக வர, அம்மையார் மூன்று வயதுக் குழந்தையாக அவளிடமே தோன்றினார்'' என அகத்தியர் கூறி மேலும் வரலாறு கூறலானார்.

[தொடரும்]

---

திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்குட நீராட்டு விழா 28.1.91 அன்று மிகச் சிறப்புற நடைபெறவுள்ளது. திருக்குட நீராட்டு விழா மலருக்கு அறிஞர் பெருமக்கள் கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி;

டாக்டர் த. அமிர்தலிங்கம்,
மலர்க்குழு சிறப்பாசிரியர்,
ஆசிரியர், ''திருக்கோயில்'',
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை—600034.





# கோவூர் திருமேனீச்சரம்

**வித்துவான் மு. கு. புண்ணியகோடி**

**கோவூர்:**

தொன்றுதொட்டுச் சீரும், சிறப்பும் வாய்ந்த தொண்டை நாட்டின்கண், பாலாறு பாய்ந்து வளம் பல சுரக்கும் தன்மையுடையதும், நஞ்சையும், புஞ்சையும் நிறைந்துள்ளதுமான செங்கற்பட்டு மாவட்டம் சிறந்த ஒரு பகுதியாகும். இம்மாவட்டத்தில், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவராகிய சேக்கிழார் பெருமான் அவதரித்த குன்றத்தூருக்குக் கிழக்கில் இரண்டரை கல் தொலைவில் உள்ளதும், சென்னைப் பட்டினத்திற்கு மேற்கில் 12 கல் சேய்மையில் உள்ளதுமான ஊரே கோவூர் என்னுந் திருப்பதியாகும்.

**கோவூர் கிழார்:** சங்க காலத்தில் தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இன்றி விளங்கியவரும், எட்டுத் தொகையுள் ஒன்றான புறநானூற்றுள் பல பாடல்களைப் பாடியவரும், புலிக்கொடிபொறித்த சோழ மன்னர்களான, நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி ஆகியோருக்கு உண்டான பூசலைத் தம் நுட்பமதியினால் நீக்கியவருமான 'கோவூர்கிழார்' என்னும் புலவர் பெருமான் பிறந்தவூர் இக்கோவூரேயாகும் என்று ஆராய்ச்சி யறிஞர்கள் கருதுகின்றனர்.

மதுரை தியாகராயர் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியராய் சிறந்திருந்த திரு ஔவை, சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் கோவூர் தேவஸ்தான நிர்வாக அதிகாரிக்கு எழுதிய கடிதமொன்றில் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள் ''கோவூர் என்று பெயா கொண்ட ஊர்கள் தொண்டைநாடு, சோழநாடு கொங்குநாடு, சேரநாடு ஆகிய நாடுகளில் உள்ளன. அவையெல்லாவற்றிலும் பழமைச் சிறப்பு இடைக்காலச் சோழ, பாண்டியர் காலமுதலே குன்றாமல் இருப்பது தொண்டை நாட்டுக் கோவூரே. பழங்காலச் சான்றோர்க்குரிய ஊர்கள் பல இன்றும் ஓரளவு சிறப்புடன் பெரும்பாலும் சிவன்கோயில்களைக் கொண்டு விளங்குகின்றன. அவ்வகையில் தொண்டைநாட்டுக் கோவூரே சங்ககாலக் கோவூர் கிழார்க்குரியதாகும் என்பது என் கருத்து. ஏனை நாட்டுக் கோவூர்களுக்கு மேலே காட்டிய சிறப்பு காணப்படாமை யொன்றே என்னை இம்முடிவு கொள்ளச் செய்தது' இதனால் சங்கப் புலவரான கோவூர்கிழார் தோன்றிய இடம் இதுவே என்பது நன்கு போதரும்.

**தினகரர்;** கோவூர் கிழாரை தோற்றுவித்துப் புகழ்கொண்ட இவ்வூர் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில், 'தினகரர்' என்னும் புரவலரைத் தோற்றுவித்துப் பெருமைக் கொண்டது. இவர், கல்வி, வீரம், கொடை, பக்தி முதலியவற்றில் சிறந்தவர் என்று தினகர வெண்பா என்னும் நூல் விளக்குகிறது. இது, சோமேசர் முதுமொழி வெண்பாவைப் போன்று, பின்னிரண்டடிகள் திருக்குறளால் முடிந்துள்ளது. முன்னிரண்டடிகள் தினகரரின் பெருமை முதலியவற்றையும், பின்னிரண்டடிகள் திருக்குறளாகவும் அமைந்துள்ளது.

''தேர்த்திருநாள் பூசைத் திருப்பணிநீ கண்ட பின்னைத்
தீர்த்தமுள்ள கோவூர்த் தினகரா-பார்த்தால்
மணியிற் றிகழ்தரு நூல்போல் மடந்தை
அணியிற் றிகழ்வதொன் றுண்டு.''

என்பதாகும்.

**சிவசங்கரர்:** ஏறத்தாழ நானூறு ஆண்டுகட்கு முன்னர், சைவவேளாளர் குலத்தில் சிவசங்கரர் என்னும் பெயர் கொண்ட ஒரு பெரியார் தோன்றி, இளமையிலேயே கற்பன கற்றுக் கற்ற வழி நின்று பின்னர்த் துறவுபூண்டு, திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர சுவாமிகளின் அருமை மாணவராக விளங்கி, சுவாமிகளுக்குப் பின்னர் அம்மடத்தின் தலைவராக இருந்து அரிய பலதொண்களைச் செய்துள்ளார் என்பது திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் வரலாற்றின் மூலமாக அறியக் கிடக்கும் செய்தியாகும். இவருடைய தந்தையாரின் பெயர் திரிபுராந்தக முதலியார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

**திருக்கோயில்:** இன்னோரன்ன, புலவர்களையும், புரவலர்களையும் தன்னகத்தேகொண்டு பெருமை பெற்ற இவ்வூரில் அழகிய திருக்கோயில் ஒன்று ஊரின் நடுவே அமைந்து உள்ளது. அழகிய நான்கு மாடவீதிகளையும், நடுவில் ஓர் சிறந்த கோயிலும் அமைந்திருக்கும் மாட்சி, காண்போர்க்குக் களிபேருவகையைத் தருவனவாகும். இவ்வூரின் அமைப்பு முறையினை நோக்கியே அரசியலார், செங்கற்பட்டு மாவட்டத்திலே இதனை, 'மாதிரி கிராமமாகத் தேர்ந்தெடுத்தும் சிறப்பித்துள்ளனர்.

**இறைவன் இறைவி:** மூலப்பண்டாரம் வழங்கும் மூல மூர்த்தியாக விளங்காநின்ற இறைவன ஸ்ரீசுந்தரேசுவரர் என்னும் பெயரோடும், பால் நினைந்தூட்டுந்தாயினும் சாலப் பரிந்து மன்னுயிர்கட்கு இன்னருள் சுரக்கும் உமாதேவி, ஸ்ரீசௌந்தராம்பிகை யென்னும் பெயரோடும் விளங்குகின்றார்கள். திருமேனீசுவரர் என்றும் இறைவன் பெயர் வழங்கப்படுகிறது. இக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களின் பட்டாக்களில் திருமேனீசுவரர் என்றே காணப்படுகின்றது. ஆனால், ஸ்ரீ தியாகராஜசுவாமிகள் பாடிய பஞ்சரத்ன கீர்த்தனங்களில் சுந்தரேசுவரர் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.



**திருக்கோயில அமைப்பு**: நான்கு பக்கங்களிலும் நானகு அகன்ற மாடவீதிகளைக் கொண்ட ஊரின் நடுவில் இத்திருக்கோயில அமைந்துளளது. இக்கோயிலின் அமைப்பு கஜப்பிரஷ்ட வமவ்ல (ஆதாவது யானைபடுததிருப்பதைப் போன்று) அமைந்துள்ளது. இததகைய கோவல்களைக் கட்டியவர்கள் சோழ மன்னர்களாவர் என்பது ஆராய்ச்சியாளருடைய முடிவாகும்.

**சுந்தரசோழன்** : இராஜ இராஜனுடைய தந்தையும், இரண்டாம் பரந்தகனுமாகிய சுந்தர சோழன என்பவன இக்சோயிலைக் கட்டியிருத்தல் கூடும் என்று எண்ண இடமிருக்கிறது. (இம் மனனன், பொன்மாளிகைத் துஞ்சியதேவன் என்றும் அழைக்கப்படுகின்றான்.) ஏனெனில் இவ்வூருக்கு அணித்தாகவுள்ள மாங்காடு என்னும் ஊரில உள்ள கல்வெட்டொனறில் இவ்வூர் (கோவூர்) 'சுந்தரசோழநல்லூர்' என்னும் இம்மன்னன் பெயரால் அழைக்கப்படுகின்றது. எனவே கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் பராந்தக மன்னனால் கட்டப்பெற்றிருத்தல் கூடும் என்பதும் இக்கோயில் ஏறத்தாழ ஆயிரத்து நூறு ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றியிருத்தல் வேண்டும் என்பதும் விளங்கும்.

**கல்வெட்டுக்கள்** : இக்கோயிலில் மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஒன்று, இரண்டாம் பராந்தகனான சுந்தரசோழன் ஆட்சிக்கு வந்த ஒன்பதாம் ஆண்டில் (கி.பி. 965-ல்) இறைவன் நிவேதனத்திற்காக, இடையர் குலத்தைச் சேர்ந்த 'கலியன்' என்பவரால் நிலதானம் அளிக்கப்பெற்றது. மற்றொன்று, இராஜராஜசோழன் ஆட்சிக்கு வந்த இருபத்து மூன்றாவது ஆண்டில், நந்தா விளக்கெரிப்பதற்காக, ஒருவர் தானம் கொடுத்தது. வேறொன்று, கோயிலில் திருவிளக்கேற்றுவதற்காகக் காஞ்சியில் வாழ்ந்த ஒருவர், கோயில் அர்ச்சகரிடத்தில் பணம் பத்து தானமாகக் கொடுத்தது.

**ஸ்ரீதியாகராஜர்** : ஏறத்தாழ நூற்றெண்பது ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவரும், இசையுலகில் சிறந்த மேதையாக விளங்கியவருமான ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் திருமால் உறையும் பல பதிகளை வணங்கி இவ்வூர்ப் போந்தார்கள். அப்போது, கோயில் தர்மகர்த்தராக இருந்த திரு சுந்தரேச முதலியாரவர்கள், ஸ்ரீசுவாமிகளை வரவேற்று உபசரித்தார்கள்.

திரு முதலியாரின் அன்பினால் பிணிப்புண்ட ஸ்ரீசுவாமிகள் சில நாட்கள் இங்கேயே தங்கியிருந்தார்கள். அவ்வமயத்தில் திரு முதலியாரின்வேண்டுகோளுக்கிணங்கி, ஸ்ரீசுவாமிகள் இவ்வூர் பெருமான்மீது 'கோவூர்ப் பஞ்சரத்னம்' என்னும் ஐந்து கீர்த்தனங்களைப் பாடியருளினார்.

'கோவூர்ப் பஞ்சரத்னம்' ஸ்ரீதியாகராஜர் பாடிய ஐந்து கீர்த்தனங்களாவன, 1. 'சம்போ மகாதேவா' (பந்துவராளி) 2. 'ஈசுவத நீவம்டி (சகானா) 3. (நம்மிவச்சிநநந்து' (கல்யாண), 4. 'கோரிஸே விம்பாரே' (கரகரப்பிரியா) 5. சுந்தரேஸருநி' (சங்கராபரணம்) என்பனவாகும்.

கீர்த்தனமும் பொருளும் : 'சம்போ மகா மகாதேவா' என்னும் கீர்த்தனத்தில் இன்பத்திற்கு இருப்பிடமானவனே! உன்னிடம் அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பவனே! உன்னிடம அன்பு செய்ய அருள்வீராக!'' எனக கூறுகின்றார்.

2. 'ஈசுவதம்நீவம்டி' என்னுங் கீர்த்தனையில, கோவூர்பபதியல் வீற்றுருக்கும சுந்தரேசப் பெருமானே, உன்னிடம் அன்புகொண்டு அரை நிமிஷமேனும் உன்னுடைய புண்ணிய ஷேத்திரததில தங்குவாராயின அவர்கட்கு, நிறைந்த செல்வமும் நீண்ட வாழவுப நல்லோரிடததது அனபும், சிறந்த புகழும ஒருங்கே தரக்கூடியவன்'' என்று கூறுகின்றார்.

3. 'நம்மிவச்சிநநந்து' என்னுங் கீர்ததனையில், 'சௌந்தர்யநாயகியின மணவாளனே வேத புராண ஆகமங்கள் நின் திருவடியைக் காண முடியாமல வருந்துகினறன. வீண்வா தங்களும், பேதங்களும் ஏன? ஒலி வடிவாகவுள்ள இறைவனே! உன்னை நம்பி வநத எஙனைக் காப்பாற்றுக'' என்று கூறுகிறார்.

4. 'கோரிஸே விம்பராரே' எனனுங் கீர்த்தனையில், ''நாம் நினைத்த காரியங்கள் நிறைவேற, கோவூரில் அழகுத் தெய்வமாக விளங்கும் ஸ்ரீசுநதரேசனை வந்து வழிபடவும தேவர்களும், சனகாதி முனிவர்களும, இவ்வூரின்கண் வந்து, இறைவன அருளைப் பெறக் காததுு நிற்கின்றனர்' என்று கூறுகிறார்.

5. 'சுந்தரேஸவருநி' என்னுங் கீர்த்தனையில், 'அழகு மிகுந்த சுந்தரேசனைக் கண்டகண்கள் வேறு தெய்வங்களைக் காண ஒருப்படுமோ? அழகு மிக்கவும், தூயகாசிக்கு ஒப்பானதுமான, சிறந்த கோவூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சுந்தரேசனை, அயன் முதலான தேவர்களும், அன்னநடைவாய்ந்த தேவப் பெணகளும், தும்புருநாரதரும், இனிய பக்தர்களும் வழிபட்டு இறைவன் இன்னருளைப் பெற்றுச் செல்கின்றனர்' என்று கூறுகின்றார்.

**ஸ்ரீதியாகராஜர் பயணம்:**—இங்ஙனம், பஞ்சரத்னம் பாடிப் பரவசமடைந்த ஸ்ரீதியாகராஜர், சுந்தரேச முதலியாரிடம் விடைபெற்றுச் செல்லலானார். அப்போது முதலியார், ஸ்ரீ சுவாமிகளுக்கு தெரியாவண்ணம், ஆயிரம் வெண் பொற்காசுகளைக் கொண்ட கிழியொன்றை அவருடைய பல்லக்கில் வைத்துவிட்டார்கள். விடியற்காலம், பொழுது சரியாக புலராத நேரம் பல்லக்கு புறப்பட்டது. பல்லக்கில் ஆயிரம் ரூபாய் இருக்கின்றது என்று அறிநத கள்வர் சிலர், அருகில் வந்தனர். அப்போது, இராம இலக்குமணர்கள் இருவரும் இருபக்கத்திலும் காவல் புரிந்து கொண்டு வந்து, பொழுது புலர்ந்த பின்னர் அவ்விடத்தை விட்டு நீங்கினர்.

பின்னர், கள்வர்கள் தம்முடைய தவறை யுணர்ந்து, ஸ்ரீசுவாமிகளிடம் மன்னிப்பு கேட்க ஓடோடி வந்து, அவருடைய கால்களில் விழுந்து, 'நாங்கள் கள்வர்கள் தங்கள் பல்லக்கில் உள்ள பொருளைக் களவாடும பொருட்டு வந்தோம். அப்போது தங்கள் பல்லக்கின் இருபுறத்திலும் வந்து காவலர்களைக் கண்டு அஞ்சி அகன்று விட்டோம். எங்கள் பிழையை மன்னித்தருள்க' என்று வேண்டினர். சுவாமிகள் அப்போதுதான், திரு முதலியார் தம் பல்லக்கில் ஆயிரம் ரூபாய் வைத்ததையும், இராம, இலக்குமணர் காவல் புரிந்ததையும் அறிந்தார்கள். உடனே தியாகராஜர், அக்கள்வர்களை நோக்கி ''தோழர்களே அந்தத் திவ்விய புருஷர்களை எனக்குக் காட்டுங்கள் இந்த ஆயிரம் ரூபாய்களையும் தங்கட்குத் தந்துவிடுகின்றேன்' என்று கூறி, இராம இலக்குமணர்கள், தம்மிடங்கொண்டுள்ள பெருங்கருணையையும், பேரன்பினையும் நினைந்து நினைந்து உருகி, 'வாசாமகோசமே' என்னும் கீர்த்தனையைப் பாடித தம் அனபினை வெளிப்படுத்தினார்.

**திருவிழாக்கள்:** ஒவ்வோராண்டும், வைகாசி திங்களில், இக்கோயிலில், பிரம்மோற்சவம் பத்து நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. அனறியும், நவராத்திரி கந்தர்சஷ்டி மாணிக்க வாசகர் விழா, சைவ சமய குரவர் நால்வர்களின் திருநாள், பஞ்சபருவம் முதலிய காலங்களிலும் விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த விழாக் காலங்களில், பல அறிஞர் பெருமக்கள், அவ்வப்போது வந்து சமயச் சொற்பொழிவாற்றுகின்றார்கள். இக்கோயிலில் ஞாயிற்றுக்கிழமை தோறும் வார வழிபாடும் அவ்வார வழிபாட்டினையொட்டிப் பெரிய புராணச் சொற்பொழிவும் நடைபெற்று வருகின்றன.

---




## சேலம் குமரகிரி திருக்குட நீராட்டு விழா

சேலத்தில் புகழ் பெற்று விளங்கும் அம்மாபபேட்டை அருள்மிகு **குமரகிரி தண்டாயுதபாணி** சுவாமித் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா 21.1.91 அன்று மிகச் சிறப்புற நடைபெறவுள்ளது. வணங்கிடும் அடியார்களின் கண்கண்டதெய்வமாம் கலியுக வரதன் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமித் திருக்குட நீராட்டு விழா நிகழ்ச்சியில் பங்கு கொண்டும், திருப்பணிகளுக்கு நிதி உதவி அளித்தும் முருகப்பெருமான் திருவருளுக்குப் பாத்திரர் ஆகுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

# கூத்தனூர் சரஸ்வதி ஆலயம்

தி. இராசமாணிக்கம், பி.ஏ.,பி.காம்.,

இந்து மதத்தின் அறுசமயங்களில் சக்தியை முழுமுதற்கடவுளாகவும், சக்தியினின்றும் எல்லாம் தோன்றியதாகவும் போற்றி வணங்குவது சாக்தம் எனப்படும். எல்லாம் வல்ல மகா லட்சுமியின் சத்வ ராஜஸ தாமஸ குணங்களினின்றும் முறையே சரஸ்வதி, இலட்சுமி, மற்றும் மகாகாளி தோன்றியதாக மார்க்கண்டேய புராணத்தில் தேவி மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது.

சக்தி வழிபாட்டிற்கு உரிய முக்கிய திருவிழா நவராத்திரியாகும். முதல் மூன்று நாட்கள் வெற்றியைக் கொடுக்க அன்னை பராசக்திக்கும், இடையில் உள்ள 3 நாட்கள் செல்வத்தை வாரி வழங்க இலட்சுமிக்கும், கடைசி மூன்று நாட்கள் கல்வியை அடைய சரஸ்வதிக்கும் உரியனவாகப் போற்றி வணங்கி வழிபட்டு வருகிறது. எல்லா நாட்களிலும் தொழ இயலாதவர்கள் கடைசி நாளன்று

''விண் கண்ட தெய்வம் பல கோடியுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகலகலாவல்லியே''

என ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளால் பரவப் பெற்ற சரஸ்வதியை வணங்குவர். எனவே அந்நாள் சரஸ்வதி பூஜை செய்யும் நாளாகக் கொள்ளப்படுகிறது.

கல்விக் கடவுளாகிய கலைமகள் பிரம்மாவின் நாவில்உறைவதாகப் போற்றப்படுகிறாள்.

''அஞ்சத்துவசம் உயர்த்தோன் செந்நா'' அவனது உறைவிடங்களில் ஒன்று என்பர் ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள்.

''நாவிற் சரசுவதி நற்றுணையாக'' என்பது கந்தர் சஷ்டி கவசம். ஒருவன் கசடற கற்று உணர்ந்தவனா அல்லது கல்லாத மூடனா என்பதை அவனது வாக்கினின்றும் தெளிவாகத் தெளியலாம். எனவே சரஸ்வதியை நாவிற்குடி கொண்டு இருப்பதாகப் பரவப்படுவது முற்றிலும் பொருத்தமாக உள்ளது.

காளியை மூலவராகக் கொண்டகோயில்கள் தமிழகத்தில் பல உள்ளன என்பது யாவரும் அறிந்த ஒன்றாம். அஷ்டலட்சுமி திருவுருவங்களை மூலவர்களைக் கொண்ட கோயில் அண்மையில் சென்னையில் கட்டப்பட்டுள்ளது. கலைமகளை மூலவர் ஆகக் கொண்ட ஒரே கோயில் தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் கூத்தனூரில் உள்ளது.

திருவாரூர் மயிலாடுதுறை பாதையில் பூந்தோட்டம் என்ற ஊரினின்றும் ஏறத்தாழ முக்கால் கிலோ மீட்டர் தொலைவில் அரசலாற்றின் கரையில் கூத்தனூர் அமைந்துள்ளது. முற்காலத்தில் இது அம்பாள்புரி என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. கி.பி. 1146 முதல் 1173 வரை சோழ அரியணையை அலங்கரித்த இரண்டாம் இராச இராசசோழன் தன் அவைப் புலவரான ஒட்டக் கூத்தருக்கு இந்த ஊரைப் பரிசாக வழங்கிய காரணத்தால் இது கூத்தனூர் என்ற பெயரைப் பெற்றது. ஹரி நாதேஸ்வரம் என்ற மற்றொரு பெயரும் இந்த ஊருக்கு உண்டு.

இங்கு அமைந்துள்ள கலைமகளுக்கு உரிய கோயில் திருச்சுற்று, முகமண்டபம் அர்த்த மண்டபம், அந்தராளம், கருவறை ஆகிய வற்றைக் கொண்டது. ஒட்டக் கூத்தர் இங்கு அருள் பெற்றதைக் குறிக்க அவரது சிலை முக மண்டபத்தில் வாயிலுக்கு இடப்புறம் அமைக்கப்பட்டுள்ளது. அவரது வலக் கையில் எழுத்தாணியும் இடக்கையில் ஓலைச் சுவடியும் காணப்படுகின்றன.

கருவறையில் தாமரை மலர் மீது பத்மாசனத்தில் அமர்ந்துள்ள அன்னையின் 4 கைகளில் பின் இரு கைகளில் தன் கணவரான பிரம்மாவைப் போன்று அக்கமாலையும் கமண்டலமும் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே இவள் ஞானசரஸ்வதி என வணங்கப்படுகிறாள். முன் இரு கைகளில் ஓலைச்சுவடியும் சின் முத்திரையும் காணப்படுகின்றன. தலையில் சடாமகுடம் அழகு செய்ய, ஸ்கந்த புராணத்தின்படி இவளுக்கு மூன்று கண்கள் அமைக்கப்பட்டுள்ளன. புன்னகை தவழும் கருணை பொழியும் இவளது திருமுகம்'சொல் விற்பனமும் அவதானமுங்கல்வி சொல்லவல்ல நல்வித்தையுந் தந்து அடிமை'' கொள்வதாக அமைந்துள்ளது.

அர்த்த மண்டபத்தில் பிள்ளையார், இலிங்கம், முருகன் ஆகியோர் உள்ளனர். பலி பீடத்தில் வலம்புரி விநாயகரும், இலிங்கத்தை அணைக்கும் நாகமும் உருவாக்கப்பட்டுள்ளன. திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் நடன விநாயகர் காணப்படுகிறார்.

ஒட்டக் கூத்தர் வரகவி பாடும் திறனைப் பெறவேண்டி இங்கு அன்னையை நோக்கி தவம் புரிந்ததாகவும், அன்னை அவருக்குத் தன் வாய்த் தாம்பூலத்தைக் கொடுத்ததாகவும், அதனால் அவர் வரகவிபாடும் வல்லமையைப் பெற்றதாகவும் கூறப்படுகிறது. ஒட்டக்கூத்தர் இவளை"ஆற்றங்கரை சொற்கிழத்தி வாழியே" எனப் போற்றியுள்ளார்.

''பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்'' எளிதில் எய்த இங்கு எழுந்தருளியுள்ள அன்னையைப் போற்றித் துதித்து உய்வோமாக.


"தர்மபுத்திரா! ஜராசந்தன் மடிந்தான். இனி இராசசூய யாகம் புரிய தடை இல்லை. நான்கு திசைகளுக்கும் படைகளை அனுப்பு"
கிழக்குத் திக்கிற்கு வீமனையும், வடக்கு திக்கிற்கு அர்ச்சுனனையும் மேற்குத் திக்கிற்கு நகுலனையும், தெற்கு திக்கிற்கு சகாதேவனையும் போருக்கு அனுப்புகிறார் தருமர்.
எட்டுத்திக்குகளையும் வெற்றிகொள்ளும் வீம, விசய, நகுல, சகாதேவர்கள் மிகத் திரண்ட செல்வத்துடனும், கோடிக்கணக்கான யானை முதலான படைச் செல்வங்களுடனும் திரும்புகின்றனர்.
சித்திர பாரதம்
கதை: செவ்வேள்
இலங்கையை முற்றுகையிடும் கடோற்கஜன், வீடணன், அளிக்கும் ஏழு பொன்னால் ஆன பனைமரங்களுடன் இந்திரப்பிரத்தம் வருகின்றான்.
நாரதரை அனுப்பி கிருஷ்ண, பலராமரையும் உலூக முனிவரை அனுப்பி வியாசர் முதலான முனிவர்களையும் தூதர்களை அனுப்பி நானாதேசத்து அரசர்களையும் வரவழைக்கிறார் தருமர்.
வியாசர் வேதமுறைப்படி யாகசாலை அமைக்கிறார். திரௌபதி வலப்புறம் வீற்றிருக்க தருமர் மான்தோல் அணிந்து யாகவேதிகையில் வீற்றிருந்து, மந்திரம் கூறி நெய்சொரிந்து ஏழு நாட்கள் வேள்வி புரிகிறார்.


கடல்மணல் போல் பெருந்திரளாய் கூடிய ஜனங்களுக்கு வீமன் விருந்து படைக்கிறான். அர்ச்சுனன் வாசனாதி திரவியம் வழங்குகிறான். நகுல சகாதேவர்கள் வெற்றிலை வழங்க கர்ணன் தர்மரின் ஆணைப்படி தான தருமம் வழங்குகிறான்.
6
7
8
தருமர் திரௌபதியுடன் கிருஷ்ணரையும் வீடுமரையும் வணங்கி வாழ்த்துக்கள் பெறுகிறார்.!
மங்களம் உண்டாகட்டும்.
9
'வந்திருக்கும் அரசர்களில் முதல் பூசைக்கு உரியவர் யார்?'' என்று தருமர் வினவ ''கிருஷ்ணரே முதல் பூசைக்கு உரியவர்'' என்கிறார் வியாசர். அனைவரும் அதை ஆமோதிக்க சேதி நாட்டரசன் சிசுபாலன் அதை மறுக்கிறான். ''பசுக்களை மேய்க்கும்
10
இடையன், பெற்றவர் இருக்க மற்றவர்க்கு மகனானவன், பூதனையின் முலை உண்டு
11
உயிரையும் உண்டவன், வெண்ணெய் உண்ட கள்வன், ஒரு பாம்பின் முதுகையும், ஒரு பறவையின் வாயொடு மூக்கையும் பிளந்தவன், இந்திரன் பூசையைத் தடுத்தவன், தன் முன் பிறந்த சோதரர் அறுவரைக் கொன்று சொந்த மாமனையும் கொன்றவன். இவனா முதல் பூசைக்கு உரியவன்?'' என்று திட்டினான்.
12
சிசுபாலனின் நிந்தை நூறு எண்ணை அடைகின்ற போது கிருஷ்ணரின் சக்கரம் அவன் தலையைத் துணிக்கிறது. சிசுபாலனின் உயிர்ச்சோதி கிருஷ்ணரின் திருவடியை வந்து சேர அனைவரும் வியக்கிறார்கள்.
13



# தனித்தனி முக்கனி பிழிந்து...

அறநெறியண்ணல்
கி. பழநியப்பனார்

தமிழகத்தில் எவ்வளவோ கனி வகைகள் விளையினும், அவற்றுள் முக்கனி என்று சிறப்பாகக் கருதப்படுவன வாழை, மா, பலா ஆகிய மூன்று கனிகளேயாகும்.

தெய்வங்களில் விநாயகப் பெருமான் இவற்றை மிகவும் விரும்புவார் என்பதை புராணங்கள் மூலம் அறிகின்றோம்.

''முப்பழம் நுகரும் மூஷிக வாகன' என்று ஔவைப் பிராட்டியார் போற்றுகின்றார்.

முப்பழம் என்பன இவைதான் என்று கபில தேவ நாயனார் விளக்கம் தந்துள்ளார்.

''வாழைக் கனி, பலவின்கனி,
மாங்கனி, தாஞ்சிறந்த
கூழைச் சுருள், குழை அப்பம், எள்
ளுருண்டை, எல்லாந் துறத்தும்
பேழைப் பெருவயிற் றோடும்
புகுந்தென் உளம் பிரியான்
வேழத் திருமுகத்துச் செக்கர்
மேனி விநாயகனே'
(மூத்தநாயனார் இரட்டை மணி மாலை)

இப்படைப்புப் பொருள்களில் முக்கனிகள் முதலிடம் பெற்றிருக்கின்றன.

வெவ்வேறு உருவுடைய மூன்று கனிகளும் வெவ்வேறு இனிய சுவைகளை உடையன.

இவை தவிர அவற்றுள் வேறு சிறப்புக்களும் மறைந்திருக்கின்றன.

**வாழை :**

பழம் என்றால் அச்சொல் வாழைப்பழத்தையே குறிக்கும்-வாழை சுவையும்சத்தும்உள்ளது. கைக்குழந்தை முதல் குடுகுடு கிழவர் வரை எந்த வயதினரும அதை உண்ணலாம். அதனால் எவ்வித தீங்கும் விளையாது. காலையிலோ, நடுப்பகலிலோ இரவிலோ எந்த நேரத்திலும் அதை உண்ணலாம். அதனால் எவ்விதத் தீங்கும் நேரிடாது. தோலை எளிதாக உரிக்கக் கூடிய பழம் வாழையொன்றேயாகும். அதற்கு ஒரு கத்தியோ பெரும் முயற்சியோ தேவையில்லை.

வாழைப் பழத்திற்கு ஒப்பானது நாயன்மார்கள் ஆழ்வார்கள் போன்ற அருளாளர்கள் அருளிய பாடல்கள். பழம் உண்ணுவது போன்று எளிதாக ஆண் பெண் பேதமின்றி எவ்வயதினரும், எந்நேரத்திலும் இவற்றைப் பாடி இறையருளைப் பெறலாம.

பண்ணுடன் பாடத் தெரியாதே என்று நினைக்க வேண்டாம். அவரவர்களுக்குத் தெரிந்த இராகத்தில் பாடினால் போதும் என்று திருஞான சம்பந்தப் பெருமானே கூறியுள்ளார்.

'கோழை மிடறாக, கவிகோளும்
இலவாக, இசை கூடும் வகையால்
ஏழையடி யாரவர்கள்
யாவை சொன் சொல் மகிழும் ஈசன்''
(திருவைகா வூர்ப்பதிகம்)

பண்ணுடன் பாடுவது தேனுடன் கலந்த பழமாகும். ஓதுவார்கள பாடுவதைக் கேட்கக் கேட்கப்பண் தானே அமைந்துவிடும். இதற்காக அனைவரும் தேவாரப் பாடசாலைகளில் சேர்ந்து படித்தல் வேண்டுமென்பதில்லை.

திருமுறைப் பாடலகளை அப்படியே பாடுவதை ஈசன் உவப்பான் என்று சுந்தரமூர்த்தி நாயனார் கூறுகிறார்.

''நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கு
அரசரும் பாடிய நற்றமிழ்மாலை
சொல்லியவே சொல்லி ஏத்துகப் பானைத்
தொண்டனேன் அறியாமை அறிந்து
கல்லியல் மனத்தைக் காதுக் கழலடி
காட்டி என்களைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்க நின்றானை
வலிவலத்தில் வந்து கண்டேனே''
(சுந்தரர்)

பாலர் முதல் வயோதிகர்வரை யாவரும் சுவைத்து பயன்பெறும் வாழைப்பழத்தைப் போன்று திருமுறைகளைப் பாடிப் பயன்பெற வேண்டும் என்பதே குறிப்பு.

மா :

வாழையின் சுவைபோலன்றி மாங்கனியின் சுவை வேறாயினும். அதுவும் நல்ல சுவையுடையதேயாகும். ஆனால் பழத்தைப் போன்று மாங்கனியின் தோலை விரலால் எளிதில் நீக்க இயலாது. தோலை நீக்கி உண்ணசுவை அதிகப்படும்.

திருக்குறள் போன்ற அறுநூல்களையும் கீதை சிவஞானபோதம் போன்ற தத்துவநூல்களையும் மற்ற அறிவியல் நூல்களையும் மாங்கனிக்கு ஒப்பிடலாம். இந்நூல்களின் உட்பொருளைத் தானாகப் புரிந்து கொள்வது சற்றுக் கடினம். மாங்கனிக்கு ஒரு கத்தி தேவைப்படுவது போன்று இந்நூல்களை படிப்பதற்கு ஓர் ஆசிரியர் அல்லது நல்ல உரை நூல்கள் தேவைப்படும்.

பக்குவம் அடையாத நிலையில் மாங்காய் எவ்வளவு புளிக்கின்றதோ அவ்வளவு இனிக்கும் பழுத்த நிலையில். அது போன்று முதலில் படித்து உணர்வதற்கே கடினமாகத் தோன்றும் அறநூல்கள் தேர்ச்சி பெற்றபின் அரிய கருத்துக்கள் உடையதாகத் தோன்றும்.

மாங்கனியை உண்டபின் அதன் கொட்டையை வித்தாக நட்டால் நாள்தொறும் வளர்ந்து உயர்ந்து பரந்த மரமாகும். அறநூல்களின் வழி பெற்ற நல்ல கருத்துக்களை நம் உள்ளத்தில் பதியவைத்து சிந்தித்தால் புதிய அரிய கருத்துக்கள் தோன்றும் என்பது உறுதி.

பலா :

உருவத்தில் மிகப் பெரிய பழம் பலாவேயாகும். அதன் மேல்தோல் முழுதும் சிறுசிறு முளைகள் நிறைந்து காணப்படும் ஆயினும் பார்வைக்கு அழகாகத் தோன்றும். ஆனால் வாழை மா போன்று இதனை எளிதில் சுவைத்தல் இயலாது. கடினமான மேல் தோலைக் கூர்மையான வாள்கொண்டு முதலில் பிளக்க வேண்டும். உள்ளே சக்கை சக்கையாக நார்கள் இருக்கும். அச்சக்கைகள் கையில் பிசின்போல ஒட்டிக் கொள்ளும் தன்மையுடையன. கைகளில் நல்லெண்ணெயைத் தடவிக்கொண்டே அதனைப் பிய்த்து எடுக்கவேண்டும். அதன் பின்னரே பலாச் சுளைகளை காண இயலும்.

## நரகில் உழல்வோர் யார்?

**ஆன்மீகப் பணிகளைத் தடைசெய்வோரும்
ஆன்மீக இதழ்ப் பணிகளைத் தடைசெய்வோரும்
ஐயமின்றி நரகில் உழலத்தக்க
பாவிகளே ஆவர்.**

—*செவ்வேள்*

பலாப் பழத்தைப் போன்றது புராண இதிகாசங்கள். பலாவின் பெரும் பகுதியை எறிந்துவிட்டுச் சுளைகளை மட்டும் சுவைத்து இன்புறுவது போன்று இந்நூல்களைப் படித்தல் வேண்டும். புராணங்களில் காணப்படும நல்ல கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து இன்புற வேண்டும். பலாப்பழத்தை அப்படியே கடித்துச் சாப்பிட ஒரு பைத்தியக்காரன் கூட முயலமாட்டான். அளவில் பெரியதாக இருக்கும் புராண இதிகாசங்களைக் கற்கும் பொழுது காலத்திற்குப் பொருந்தாததும் தேவையற்றதுமான பகுதிகளில் அதிகம் கவனம் செலுத்தாது, நல்வாழ்வுக்குத் தேவையான பகுதிகளையே மனதிற்கொள்ள வேண்டும். புனித புராணத்தில் எப்படி ஒரு பகுதியை ஒதுக்குவது என்று கருதுவது பலாப்பழத்தை அப்படியே முழுமையாகத் தின்ன முயல்வதற்கே ஒப்பாகும்.

''உலகத்தோ(டு) ஒட்ட ஒழுகல் பலகற்றுங் கல்லார் அறிவிலா தார்'' என்ற குறளுக்கு விளக்கம் கூறிய பரிமேலழகர் இவ்வாறு எழுதுகிறார்.

''உலகத்தோடு பொருந்த வொழுகுவதாவது: உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதன ஒழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பன கொள்ளுதல்' என்கிறார்.

ஆகவே அருட்பாடல்களை வாழைப் பழமாகவும், அறநூல்களை மாங்கனியாகவும், புராணங்களைப் பலாப் பழமாகவும் கருதிப் பயின்று இன்புறுவதே பயனுடையதாகும்.

இராமலிங்க சுவாமிகள் மா, பலா, வாழை எனும் முக்கனியின் சுவை இன்பத்தை விடவும் இறை இன்பம் மேலானது என்று பாடியுள்ள பாடல் பின்வருமாறு:


''தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாய்
கூட்டிச்
சருக்கரையும் கற்கண்டின் பொடியும் மிகக்
கலந்தே
தனித்த நறுந் தேன்பெய்து பசும்பாலும்
தெங்கின் தனிப்பாலும்
சேர்த்தொடு தீம்பருப்பிடியும் விராவி
இனித்தமுறு நெய்யளைந்து இளஞ்சூட்டின்
இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடும்
தெள்ளமுதே
அநித்தமறத் திருப்பொதுவில் விளங்கு
நடத்தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கல்
அணிந்தருளே.''

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.






ஆழ்வார்திருநகர் அருள்மிகு ஆதிநாதர் ஆழ்வார் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் 26.8.90 அன்று நடைபெற்றது. அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் யாகசாலை பூஜையில் கலந்துகொண்டு உரையாற்றினார். உதவி ஆணையாளர் மு.தெய்வகுமார் பி.ஏ.பி.எல்., நிர்வாக அதிகாரி திரு பா.நம்பிராஜன், திருப்பணிக் குழுத்தலைவர் ஆர்.திருவேங்கடத்தான் ஆகியோர் உடன் உள்ளனர்.






இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் நடைபெற்ற காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணியை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ. அவர்கள் 25.10.90 அன்று துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு ஆதிதிராவிட அமைச்சர் திருமிகு க.சுந்தரம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள், தொண்டை மண்டலாதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகள், தவத்திரு அன்னதானசிவம் ஐயப்பசுவாமிகள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். துணை ஆணையாளர் திரு கு.சிதம்பரம் பி.ஏ., உதவி ஆணையாளர் ப.ராஜா பி.எஸ்.சி.,பி.எல்., நிர்வாக அதிகாரி சு.சிவனான், திருப்பணிக்குழுத் தலைவர் திரு பா.சண்முகம் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.